178
254

egistered No. M. 2330

178

SIDDHANTHAM
Vol. 26—No. 12

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

'தன்கட னடியே னையுந் தாங்குதல்
என்கட னபணி செய்து கிடப்பதே'

மலர் 26 | விஜய மார்கழி 1953 டிசம்பர் | இதழ் 1

உள்ளுறை

நாட்டு ஒலி ... 545
சித்தாந்தப் பேராசிரியர் மறைவு ... 550
பண்டிதமணி கதிரேசஞ் செட்டியார் ... 554
திருச்சோபுரம் ... 555
சங்கற்ப நிராகரணம் ... 557
நமது சிற்பக்கலை ... 565
திருவாசகச் சிறப்பு ... 570
பெரு விண்ணப்பம் ... 577
சைவப்புலவர் தேர்வு வினாக்கள் ... 579
மதிப்புரை ... 585
... 586

16 JAN 54

RB73 N28
MS 3/26.12
188897

ம். இராமச்சந்திரன் செட்டியார், பி.ஏ., பி.எல்
சிரியர் : புலவர் - முருகவேள், பி.ஓ.எல்.
சித்தாந்த மகா சமாஜம்
— ரோடு, இராயப்பேட்டை, சென்னை-14

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சைவ சித்தாந்த மகா சமாஜம்

## 48-வது ஆண்டு நிறைவுவிழா,

இராயப்பேட்டை, சென்னை

---

# சைவர் மாநாடு

---

" ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆலவாயில் உறையுமெம் ஆதியே !"

பேரன்புடையீர்,

நிகழும் விஜய ஆண்டு, மார்கழித் திங்கள் ௰-ம் நாள் (25-12-53) வெள்ளிக்கிழமை தொடங்கி மூன்று நாட்கள் சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் **48-வது ஆண்டு நிறைவு விழாவும், சைவர் மாநாடும், சைவ இளைஞர், சைவ மங்கையர் மாநாடுகளும்,** சென்னை இராயப்பேட்டை, ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபையின் குகானந்த நிலையத்தில் (நெ. 3, மோபரீஸ் ரோட்) அடுத்த பக்கங்களிற் காணும் நிகழ்ச்சிமுறைப்படி நடைபெறும்.

மதுரைத் திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீன உபதலைவர் **ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாசாரிய சுவாமிகள்** மாநாட்டைத் திறந்தருளவும், யாழ்ப்பாணம் - வட்டுக்கோட்டை, வழக்கறிஞர் **உயர்திரு. வ. நாகலிங்கம் பிள்ளை அவர்கள், J.P., U.M.** தலைமை தாங்கவும் இசைந்துள்ளார்கள்.

சைவ இளைஞர் மாநாடு, சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தத்துவப்பேராசிரியர் **டாக்டர் V.A. தேவசேனபதி, M.A., Ph.D. அவர்கள்** தலைமையிலும், சைவமங்கையர் மாநாடு,

## சமாஜ அறிக்கைகள்

சமாஜத்தின் 48-வது ஆண்டு நிறைவு விழா, சென்னை இராயப்பேட்டை, ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபையில், டிசம்பர் 25, 26, 27-தேதிகளில் சிறப்பாகக் கொண்டாடப்பெறும். இவ்விழாவுக்கு வரும் சமாஜத்தின் வெளியூர் உறுப்பினர்கள், தம் வருகையை, சமாஜத்தின் காரியதரிசிக்கு, டிஸம்பர் 15-ந்தேதிக்குள் அறிவிக்குமாறு கோரப்படுகிறது. இவ்வாறு முன்னறிவிப்புடன் வரும் வெளியூர் உறுப்பினர்களுக்கு மட்டும் இடவசதியும் உணவு வசதியும் ஏற்பாடு செய்யப்படும்.

### சமாஜத்தின் அடுத்த ஆண்டு விழா

நம் சமாஜத்தின் 49-ம் ஆண்டுவிழா டிஸம்பர் 1954-ல் நடைபெறவேண்டும். அம் மகாநாட்டைத் தம் ஜில்லாவில் நடத்த விரும்பும் அன்பர்கள் இப்பொழுதே தம் உள்ளூர்ப் பிரமுகர்களைக் கலந்தாலோசித்துக் கொண்டு, இம்மாத இறுதியில் சென்னையில் நடைபெறும் மகாநாட்டின் சமாஜ உறுப்பினர் பொதுக்கூட்டத்தில் தம் கருத்தை வெளியிட வேண்டிக் கொள்ளப்படுகின்றனர்.

### சமாஜ உறுப்பினர் பொதுக்கூட்டம்

இராயப்பேட்டை பாலசுப்பிரமணிய பக்தஜன சபையில் 19-12-53 சனிக்கிழமை காலை 9 மணிக்கு, சமாஜ உறுப்பினர் பொதுக்கூட்டம் நடைபெறும். அப்பொழுது சமாஜ ஆண்டு விழாவைப்பற்றியும், சமாஜக் கணக்கைப் பற்றியும் அங்கத்தவர் ஆலோசிப்பார்கள். அன்று போதிய நிறைவெண் இல்லாவிட்டால், மறுநாள் 20-12-53 ஞாயிறு காலை, அதே இடத்தில் அதே மணிக்குக் கூட்டம் கூடி, வந்தோரைக் கொண்டு முடிவு செய்யும். கூட்டத்திற்கு நேரில் வர இயலாதோர் கடித மூலமாகத் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கலாம்.

* * *

சமாஜத்தில் வெளியூர் சைவ சமய சபைகளைப் பற்றிய விவரங்களைச் சேகரிக்க விரும்புகிறோம். சபைகளின் முழுப் பெயர், விலாசம், தலைவரின் பெயர், காரியதரிசியின் பெயர், சபை நிறுவிய வருஷம், சபை செய்துவரும் தொண்டு முதலிய விவரங்கள் தேவை. இவற்றை சமாஜ உறுப்பினர்களோ, அல்லது சபைகளோ சமாஜக் காரியதரிசிக்குக் கடிதமூலம் அறிவிக்க வேண்டுகிறோம்.

## பெருமக்கள் பிரிவு—அனுதாபக்கூட்டம்

மகா மகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார் அவர்கள், சைவசித்தாந்த முதுபெரும் புலவர்

சென்னை A. R. C. பெண்கள் உயர்தரப்பள்ளித் தலைமை ஆசிரியை **திருமதி. மரகதவல்லி சிவபூஷணம், B.A., B.T. அவர்கள்** தலைமையிலும் நடைபெறும்.

தாங்கள் தங்கள் சபையினரோடும் பிற அன்பர்களோடும் மூன்று நாட்களும் வந்திருந்து மாநாடுகளைச் சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம்.

இங்ஙனம் :

இராவ்சாகிப்

நல். முருகேச முதலியார், ச. சிவகுமாரன்,

தலைவர் பொதுக்காரியதரிசி

---

## நிகழ்ச்சி முறை

### விஜய மார்கழி 10-ம் நாள் (25-12-53) வெள்ளிக்கிழமை

காலை 7- — 7-45 இராயப்பேட்டை ஸ்ரீசுந்தரேசுவரர் திருக்கோயிலில் இறைவழிபாடு. சமாஜத்தின் ஏழாம்பதிப்பாகிய திருவெம்பாவை வெளியீடு.

7-45— 8-30 இருக்கோயிலினின்று மாநாட்டுத் தலைவர்களை மாநாட்டிற்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லுதல்.

8-30— 9-00 திறப்புரை : மதுரைத் திருஞான சம்பந்த சுவாமிகள் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாசாரிய சுவாமிகள்.

9-00— 9-30 வரவேற்புரை : சமாஜத் தலைவர். ஆண்டறிக்கை வாசித்தல் : சமாஜப் பொதுக் காரியதரிசி.

9-30—11-30 தலைமைப் பேருரைகள்; கடவுள் வாழ்த்து.

மாலை 4-00— 4-30 திருமுறை ஓதல்; தலைவர் முன்னுரை.

வித்துவான் திரு. க. வெள்ளைவாரணனர், ...மிழ் விரிவுரையாளர், அண்ணாமலைப் ...கலைக் கழகம், சிதம்பரம் —'திருமுறையும் சிவநெறியும்'

மாலை 5-15— 6-00 திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார், பி.எ., பி.எல்., முன்னாள் மகாசமாஜத் தலைவர், சென்னை—'அகந்தைக்கிழங்கை அகழ்ந்தெடுத்தல்'

6-00— 6-45 சித்தாந்த சிகாமணி திரு. க. வஜ்ஜிரவேல் முதலியார், பி. எ., எல். டி., ஆசிரியர், பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளி, காஞ்சிபுரம்—'சைவ சித்தாந்தமும் நடைமுறை மெய்ம்மையும்'

6-45— 7-30 தலைவர் கருத்துரை ; கடவுள் வாழ்த்து.

### விஜய மார்கழி 11-ம் நாள் (26-12-53) சனிக்கிழமை

காலை 8-30— 9-00 திருமுறை ஓதல் ; தலைவர் முன்னுரை.

9-00— 9-45 திரு. பூ. ஆலால சுந்தரஞ் செட்டியார், எம்.எ., தமிழ்ப் பேராசிரியர், சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரி, தாம்பரம் —'சைவ சமய வளர்ச்சி'

9-45—10-30 திரு. ரா. சண்முக சுந்தரஞ் செட்டியார், நகராண்மைக் கழகம், சென்னை —'திருவெம்பாவை'

10-30—11-15 திரு. வீர. சிவசுப்பிரமணியம், குலசேகர பட்டணம்—'சைவமும் தமிழும்'

11-15—11-30 தலைவர் கருத்துரை; கடவுள் வாழ்த்து.

### சைவ மங்கையர் மாநாடு

மாலை 4-00— 4-30 திருமுறை ஓதல்; தலைவியார் முன்னுரை.

4-30— 7-00 திருமதி. வித்துவான் மீனாட்சிசுந்தரம் அம்மையார்—'சங்க காலத்துப் பெண் மணிகள்'

திருமதி. தூசப்பிரியை அம்மையார், சென்னை—'சமய வாழ்வும் இல்லறமும்'

திருமதி. தாயாரம்மாள், தமிழாசிரியை, பெண்கள் பயிற்சிப் பள்ளி, எழும்பூர், சென்னை— 'நாயன்மாரும் அவர்தம் மனைவியரும்'

7-00— 7-30 தலைவியார் முடிவுரை ; கடவுள் வாழ்த்து.

18897

R673 ... 1153.26

விஜய மார்கழி 12-ம் நாள் (27-12-53) ஞாயிற்றுக்கிழமை

## சைவ இளைஞர் மாநாடு

| | | |
|---|---|---|
| காலை | 8-30— 9-00 | திருமுறை ஓதல் ; தலைவர் முன்னுரை. |
| | 9-00—11-00 | திரு. வே. முத்துசாமி, குருகுலம், மாம்பாக்கம்—'உண்மை விளக்கம்' <br> திரு. வித்துவான் அம்பை. இரா. சங்கரன் தமிழாசிரியர், பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளி, சென்னை-'சமயமும் வாழ்வும்' |
| | 11-00—11-30 | தலைவர் முடிவுரை ; கடவுள் வாழ்த்து. |
| மாலை | 3-00— 4-00 | சமாஜஉறுப்பினர் பொதுக்கூட்டம்; உத்தியோகஸ்தர் தேர்தல் ; தீர்மானங்கள். |
| | 4-00— 4-30 | திருமுறை ஓதல் ; தலைவர் முன்னுரை. |
| | 4-30— 5-15 | திருமதி. எம். இ. சரஸ்வதி, பி.ஏ., மேரி ராணியார் கல்லூரி, சென்னை —'அப்பரின் அருள்வாழ்வு' |
| | 5-15— 6-00 | வித்துவான் - திரு. கி. வா. ஜகன்னாத ஐயர், எம். ஏ., ஆசிரியர், 'கலைமகள்', சென்னை—'கந்தரநுபூதி' |
| | 6-00— 6-45 | திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை, பி.ஏ., எல். டி., முன்னாள் சமாஜத் தலைவர், சென்னை—'ஒழுக்க அணி அமை' |
| | 6-45— 8-00 | நன்றி கூறல்: சமாஜப்பொதுக்காரியதரிசி; தலைவர் முடிவுரை ; கடவுள் வாழ்த்து. |

---

குறிப்புகள் :—1. மாநாட்டில் சமாஜ வெளியீடுகள் விலைக்குக் கிடைக்கும். 2. மாநாட்டில் இடையிடையே சங்கீதபூஷணம் - வித்துவான் - ம. து. புண்ணியகோடி அவர்களும், திரு. முருக. விசாகநம்பி அவர்களும் திருமுறை ஓதுவார்கள். 3. சமாஜத்தின் வெளியூர் அங்கத்தினர்க்கு மட்டும் தங்கும் இடம், உணவு ஆகிய வசதிகள் ஏற்பாடு செய்யப்பெற்றிருக்கின்றன. உணவுச் செலவு முழுவதையும் சென்னை இராயபுரம் ருக்மிணி குக்கர் உரிமையாளரும் சமாஜப் பிரமுகருமாகிய திரு. அ. சோமசுந்தரஞ் செட்டியார், எம். ஏ. அவர்கள் அன்புடன் ஏற்றுள்ளார்கள். 4. வெளியூரிலிருந்து வரும் சமாஜ உறுப்பினர் தம் வருகையை டிஸம்பர் 15 தேதிக்குள் சமாஜப் பொதுக்காரியதரிசிக்குக் கடிதமூலம் அறிவிக்க வேண்டும். முன் அறிவிப்பின்றி வரும் வெளியூர் உறுப்பினர் வேறு ஏற்பாடு செய்துகொண்டவராகக் கருதப்படுவர்.

சாது அச்சுக்கூடம், சென்னை

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

## சைவ சித்தாந்த மகா சமாஜத்தின்
## திங்கள் தமிழ்த்தாள்

மலர் : இருபத்தாறு

1953

தாளாசிரியர் :

திரு. சி. எம். இராமச்சந்திரன் செட்டியார், பி.ஏ.,பி.எல்.

உதவித் தாளாசிரியர் :

புலவர் – முருகவேள், பி. ஓ. எல்.

சைவ சித்தாந்த மகா சமாஜம்

192, லாயிட்ஸ்ரோடு, இராயப்பேட்டை, சென்னை–14

திரு. வி. க. நினைவு மலர் 433, 510
துகளறு போதம்—முத்து சு. மாணிக்கவாசக முதலியார் ... 68
தோபா சுவாமிகள்—திருஞானசம்பந்தம் ... 322
நமது சிற்பக்கலை—ம. ரா. ... 565
நாட்டு ஒலி—ஆசிரியர்
1, 49, 97, 145, 193, 241, 289, 337, 385, 545
நாவலர் நினைவு விழாத் தலைமை உரை—கா. பொ. இரத்தினம்
82, 139,
நிகழ்ச்சிகளின் சுருக்கம் ... 333
நிலத்தின் தோற்றம்—கோவைகிழார் ... 399
நீத்தாய கயம்—அழகுமதியன் ... 61
பண்டிதமணி கதிரேசஞ் செட்டியார்—ஆர். இராஜரத்தினம்... 554
பாகம் பிரியாள் மாதர் கழக வெள்ளிவிழாத் தலைமைஉரை
378, 409,
பிறப்புநாள் வாழ்த்துக்கூட்டம்—ஆ. குற்றாலலிங்கம் பிள்ளை ... 407
பிரிவாற்றாமை ... 529
பெரும்பேர் ஆசான் மறைவு—கோவைகிழார் ... 497
பெருவிண்ணப்பம் ... 577
மதிப்புரைகள் 46, 93, 143, 187, 238, 415, 585
மணிமுடிச் சோழன்—மா. சிவகுருநாத பிள்ளை ... 319
மெய்யன்பு—தி. மு. சங்கரலிங்கம் ... 365
வேண்டுதல் வேண்டாமை—திருஞானசம்பந்தம் ... 270

சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை-14

Regd. M. 2330

உ

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு

மலர் 26 | விஜய மார்கழி 1953 டிசம்பர் | இதழ் 12

## நாட்டு ஒலி

### ஒளிப்பிழம்பும் விளக்கீடும்

உலகத்தில் பொருள்களை மண், நீர், நெருப்பு, காற்று, வெளி என ஐந்து பிரிவுகளாப் பிரித்து வழங்குவதுண்டு. இப்பிரிவினை கீழ் நாடுகளில் மட்டுமல்ல மேல் நாடுகளிலும் பண்டைக்கால முதல் வழக்கத்தில் கொண்டிருக்கின்றார்கள். இவைகளை அடிப்படைப்பொருள்கள் என்று வழங்கி வந்திருக்கின்றார்கள். மேல் நாட்டார்கள் எலிமெண்ட்ஸ் என்றும், வடநாட்டார்கள் பூதங்கள் என்றும் வழங்குவார்கள். மேல்நாட்டில் விஞ்ஞானத்துறையில் ஆராய்ச்சி பெருகப் பெருக இவைகள் அடிப்படைப்பொருள்கள் அல்ல என்று முடிவு கட்டி அவற்றைக் கூறு கூறாகப் பிரிவினை செய்து இனிமேல் பிரிக்கக்கூடாது என்ற வகையில் சில வற்றைமட்டும் அடிப்படைப் பொருள்களாகக் கண்டுபிடித்திருக்கின்றார்கள். அவற்றுள் சிலவற்றைப் பொன்வகைகள் என்றும், மற்றவற்றைப் பொன் அல்லாதவைகள் என்றும் இரண்டு பிரிவாக்கி உள்ளார்கள். பொன் என்ற வகையில் தங்கம், வெள்ளி, இரும்பு முதலியவைகளும், பொன் அல்லாத வகையில் கந்தகம், கரி முதலியவைகளும் உதாரணமாகக் கொள்ளப் பட்டுள்ளன. இந்த வகையில் மேலே கூறிய பூதப் பொருள்களில் மண் என்பது பல அடிப்படைப் பொருள்களின் கலப்பென்றும், நீர் என்பது இரண்டு வாயுக்களின் கலப்பென்றும், காற்று என்பது சில வாயுக்

## உள்ளுறை


| பொருள் | பக்கம் |
|---|---|
| அங்காளம்மன் பதிகம்—வித்வான் கந்தசாமி முதலியார் | ... 90 |
| அஞ்சுதல் அஞ்சாமை—திருஞானசம்பந்தன் | ... 518 |
| அன்பர்கள் மறைவு | ... 95 |
| ஆவின் பெருமை—திருஞானசம்பந்தம் | 45, 74 |
| இயற்கையின் ஒருகாட்சி—S. அருணசலம் | ... 260 |
| இனி அரிதே போலும் !—புலவர் - முருகவேள் | ... 526 |
| ஈரோடு தொண்டசுவாம்—கோவைகிழார் | ... 152 |
| உணவுக்கொள்கை | 77, 385 |
| உண்மைச் சேவை—அழகுமதியன் | ... 277 |
| எடுத்த பொற்பாதம்—தி. மு. சங்கரலிங்கம் | ... 125 |
| ஒரு சிறந்த அறிஞர் மறைந்தார்—தி. வள்ளிநாயகம் | ... 236 |
| ஒன்பதாம் திருமுறை ஆசிரியர்கள் வரலாறு—துடிசை கிழார் | 417, 537 |
| காமஞ்சான்ற ஞானப்பனுவல்—புலவர்-முருகவேள் | 164, 219 |
| கிழக்கும் மேற்கும் | ... 502 |
| சங்கற்ப நிராகரணம்—புலவர்-முருகவேள் | 312,347,394,514,557 |
| சமயப்பற்று மாணவருக்கு இன்றியமையாததா ?—திருஞான சம்பந்தம் | ... 132 |
| சமாஜ அங்கத்தினர் பொதுக்கூட்டம் | ... 211 |
| சமாஜ மாதாந்திரக் கூட்டம்—சு. இளவழகன் | ... 30 |
| சமாஜ ஆண்டுவிழா—G. கலியாணம் | ... 197 |
| சமாஜ 47-ம் ஆண்டறிக்கை | ... 208 |
| சித்தாந்தப் பேராசிரியர் மறைவு—கோவைகிழார் | ... 550 |
| சிதைவுற்ற சிவாலயம்—சு. சுவாமிநாத தேசிகர் | ... 9 |





| | |
|---|---|
| சிவஞானமுனிவரும் சைவ சித்தாந்தமும்—புலவர்-முருகவேள் | 303 |
| சிவப்பிரகாசம் மூலமும் உரையும்—புலவர் - முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் | 15, 56, 117, 158, 250 |
| செல்வம்...?—வித்வான் தி. மு. சங்கரலிங்கம் | ... 205 |
| செய்தித்திரட்டு | 96, 190, 240, 284, 383, 429, 531, 586 |
| சேர் பொன்னம்பலம் இராமநாதன்—சேர் கந்தையா வைத்திய நாதன் | ... 24 |
| சைவப்புலவர் தேர்வு வினாக்கள் | 183, 579 |
| சைவர் மாநாட்டுத் தலைமையுரை—குன்றக்குடி ஆதீன கர்த்தர் அவர்கள் | ... 226 |
| தமிழ்நாட்டு எல்லைத் தீர்மானங்கள்—தெ. ச. சு. சோம சுந்தரம் | ... 39 |
| தலப்பகுதி—திருக்கழுக்குன்றம்—கோவைகிழார் | ... 51 |
| திருக்கள்ளில் —கோவைகிழார் | ... 6 |
| திருக்கூடலையாற்றூர் ,, | ... 346 |
| திருச்சிக்கல்—சு. சுவாமிநாத தேசிகர் | ... 298 |
| திருச்சோபுரம்—கோவைகிழார் | ... 555 |
| திருத்தினை நகர் —கோவைகிழார் | ... 500 |
| திருத்துங்கானை மாடம் ,, | ... 295 |
| திருவெருக்கத்தம்புலியூர் ,, | ... 392 |
| திருவொற்றியூர் ,, | ... 106 |
| திருமழபாடி—சு. சுவாமிநாத தேசிகர் | ... 110 |
| திருப்பாதிரிப்புலியூர் ,, | ... 154 |
| நெல்வாயில் அரத்துறை—கோவைகிழார் | ... 248 |
| திருக்கழுக்குன்ற இன்னிசைப்பெருவிழா—ந. ரா. ஆடலரசு | ... 373 |
| திருமந்திரமும் உலகியல் செய்திகளும்—ம. ரா. | ... 261 |
| திருவள்ளுவர் திருநாளும் அதனைக் கொண்டாடும் முறையும் கா. பொ. இரத்தினம் | ... 214 |
| திருவாசகச் சிறப்பு—புலவர் – முருகவேள் | ... 570 |

களின் மிச்ரம் என்றும் கண்டுபிடித்திருக்கின்றார்கள் மற்றை இரு பொருள்களில் வெளி என்பதின் தன்மை இதுவரை நன்கு அறியப்படவில்லை. நெருப்பு என்பது பொருள் அல்லவென்றும், இரண்டு பொருள்களின் சேர்க்கையால் ஏற்படும் ஒரு ஆற்றல் என்றும் அறியப்பட்டது. அவ்வகை ஆராய்ச்சியில் நெருப்பில் சூடு, ஒளி என்ற இரு நிலைகள் இருப்பதை அறிந்து இரண்டையும் இரண்டு விதங்களாகக் கொண்டு தனித் தனி ஆராய்ச்சிப் பகுதிகளாக நாளது வரை எழுதிவந்திருக்கின்றார்கள். விஞ்ஞானத்துறையில் படிக்கும் மாணவர்களும் சூடு, (Heat), ஒளி (Light) என்ற பெயர்களில் தனித் தனி பாடங்கள் வைத்துக்கொண்டு படிக்கிறார்கள். சூட்டிற்கும், ஒளிக்கும் ஒருவித சம்பந்தமும் இல்லை என்னும் முறையில் அப்பாடங்கள் போதிக்கப்பட்டன. ஆனால் தற்காலிக ஆராய்ச்சியில் இப்பிரிவினையும் இதனால் கொண்ட வேற்றுமையும் மறைந்து வருகின்றன. பேராசிரியர் ஐன்ஸ்டீன் முதலியோர்கள் செய்து வந்த ஆராய்ச்சியின் முடிவாகப் பொருள்களின் தட்ப வெப்பங்களில் ஒரு கூறு சூடாகவும், ஒரு கூறு ஒளியாகவும் ஏற்படுகின்றது என்பது தற்கால ஆராய்ச்சி முடிபு. ஒவ்வொரு பொருளும் அணுக்களின் சேர்க்கையால் ஏற்பட்டது. அவ்வணுக்களிலும் ஆண், பெண் பாகுபாடு உண்டு. இவ்விரண்டும் ஒன்றை ஒன்று சுற்றிக் கொண்டிருக்கும். அச்சுற்றுதலின் வேகத்தைப் பொறுத்திருக்கிறது அதனுடைய வெப்ப நிலை. அவ்வெப்ப நிலை, வெப்பக் கருவியால் அளக்கமுடியும். மிக நிதானமாக இருக்கும்போது அதனைத் தட்பம், வெப்பம் என்கிறார்கள். அது மிக ஏற்றம் அடையும்போது அதனை ஒளி என்கிறார்கள். கீழான நிலை தொடுகிற புலனுக்கும் மேலான நிலை கண்புலனுக்கும் அறிமுகம் ஆகின்றது. இவ்விரண்டிற்கும் மிகக்கீழும், மிகமேலும் இருக்கும் நிலைகளும் உண்டு. இவைகள் மானுடப் புலன்களுக்கு எட்டுவதில்லை. இவைகளில் சிறிது தொலைவுமட்டும் விஞ்ஞானம் அறிந்து வருகின்றது. அறியாத நிலை உண்டு என்பதை அடி, முடி தேடிய ஐதீகம் விளக்குகின்றது.

இனி மேலே கூறிய விஞ்ஞான ஆராய்ச்சியே பொருள்களின் நிலைமையைக் கூறும்போது அலைகள் (Waves)



என்ற சொல்லால் குறிக்கின்றார்கள். பேரலைகள், நடு அலைகள், சிற்றலைகள் என்ற முப்பிரிவினைகள் ஆக்கி, வானொலித் தன்மைகளை விளக்குகிறார்கள். அசைவில்லாத ஒரு நீர் நிலையில் ஒரு பருக்கைக் கல்லை எறிந்தால் அக்கல் விழுந்த இடத்திலிருந்து சிற்றலைகள் ஒன்றன்பின் ஒன்றாகப் பரவிப்போவதை அறிவோம். கடலிலோ அவ்வலைகள் பேரலைகளாகத் தோன்றும். உலகப் பொருள்கள் எவை எடுத்தாலும் இவ்வித அலைகளினால் தோற்றம் ஆகின்றன என்பர். அலையின் அசைவுகளால் ஒலி உண்டாகின்றது. அவ்வசைவுகளே சூட்டினையும், ஒளியினையும் படிப்படியாகத் தோற்றுவிக்கின்றன. சிற்றலைகளுக்குக் கீழே செல்லச் செல்ல நமது புலன்களுக்கு எட்ட முடியாத அலைகளும், பேரலைகளுக்குமேலே செல்லச் செல்லக் கோசரம் ஆகாத பேரலைகளும் உண்டு. ஒரு காலம் இரண்டு அறிஞர்கள் தம்முள் வாதாடினார்கள். ஒருவர் சிற்றலைகளுக்குக் கீழே எதுகாறும் அசைவு உண்டு என்று கண்டுபிடிக்கச் சென்றார். மற்றொருவர் பேரலைகளுக்குமேலே எது உண்டு என்று கண்டு கூறச் சென்றார். அவ்விருவரும் அவ்விரண்டு முடிபுகளையும் காணமுடியாமல் திகைத்துத் திரும்பினார்கள். இதுதான் அடிமுடி தேடிய வரலாற்றின் கருத்து.

இனி விஞ்ஞான ஆராய்ச்சியில் காணும் மற்றொரு பகுதியைக் காண்போம்: இயற்கை உலகில் மிகப் பெரிய பொருள்களும் மிகச் சிறிய பொருள்களும் உண்டு. மிகப் பெரிய பொருள்கள் அண்டங்களாக உருளுகின்றன. மிகச்சிறிய பொருள்களோ அணுவுக்குள் அணுவாக அசைந்து கொண்டிருக்கின்றன. மையத்தில் உள்ள பொருள்களே மானிடர்களாகிய நமக்கு எளிதில் தோன்றுகின்றன. நாமிருக்கும் இவ்வுலகத்தைச் சுற்றிக் கோள்கள் தோன்றுகின்றன. கோள்களுக்கிடையில் கதிரவன் இருந்து அவற்றை ஆட்டி வைக்கிறான். அவனுக்கு மேலே உள்ள கதிர் மண்டலங்களுக்கு அளவில்லை. சில மண்டலங்கள் கணக்கற்ற ஒளி வருடங்களுக்கு அப்பால் இருக்கின்றன. இவைகளைக் கண்டுபிடிக்க மனிதனால் இயலாது. அதைக் கண்டுபிடிக்க விஞ்ஞானம் முயலுகிறது. முன்னொருகால் ஓர் அறிஞன் அதனைக் கண்டுபிடிக்க முயன்

றான். முடியவில்லை. இனி அதற்கு எதிரிடையாக அணுவுக்குள் அணுவாகக் கணக்கற்ற சிறு பொருள்கள் இருக்கின்றன. அவைகளையும் கண்டுபிடிக்க விஞ்ஞானம் முயலுகிறது. அதையும் கண்டுபிடிக்க மற்றொரு அறிஞன் முயன்றான். அவனாலும் முடியவில்லை. இக்கதைதான் அடிமுடிதேடிய படலமாக விளங்குகின்றது. இதையே வாதவூரடிகள் 'வேதங்கள் ஐயாஎன ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே' என்று கூறுகிறார். மேலும் 'பாதாளமேழினுங்கீழ் சொற்கழிவு, பாதமலர், போதார் புனைமுடியும். எல்லாம் பொருள் முடிவே' என்றும், 'முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளே, பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே' என்றும் கூறியிருப்பதன் பொருளும் இதுவேயாகும். இந்தக் கருத்தையே நாம் திருவண்ணாமலை ஐதீகத்தில் காண்கிறோம்.

மேலே கூறிய ஐந்து பூதங்களுக்கும், ஐந்து ஸ்தலங்களை வகுத்து நம் நாட்டில் வழிபாடு செய்யப்படுகின்றது. அவைகளில் நெருப்பு ஸ்தலமாகத் திருவண்ணாமலை கொள்ளப்படுகின்றது. இங்கேதான் அடிமுடி தேடியதாக ஐதீகம் கூறும். ஆகவே இந்த ஸ்தலத்திற்குப் பல்லாயிரக் கணக்கில் நாட்டு மக்கள் சென்று வழிபாடுசெய்வதில் வியப்பு இல்லை. ஒவ்வொரு ஆண்டிலும் கார்த்திகைத் திங்களில் முழுமதியாகிய கிருத்திகை நாளில் மலையின் உச்சியிலும் திருக்கோயிலில் எழுந்தருளி யிருக்கும் பஞ்சமூர்த்திகளின் முன்னிலையிலும் ஜோதிகள் அல்லது ஒளிப்பிழம்புகள் தோற்றம் அளிக்கும். இக்காட்சியைக் காணத்தான் கணக்கற்ற மக்கள் செல்லுகிறார்கள். மலையே ஒளிப்பிழம்பாக விளங்கிற்று. அதன் அடியும் முடியும் அறிஞர்களால் காணமுடியவில்லை. அவ்வைதீகத்தின் கருத்தை அறியவே மக்கள் முயலவேண்டும். ஒளிப்பிழம்பு மிகப் பெரியதாகத் தோன்ற அதனைக்கண்டு விளக்கொளி வரிசையாக வைத்து மக்கள் தேர்வு பெறுவார்கள். இதுதான் வீடுகள்தோறும் வைக்கும் கார்த்திகை விளக்கீடு. இவ் விளக்கீட்டுவிழா சம்பந்தர் காலத்திற்கு முந்தியே இருந்ததென்று பூம்பாவைப் பதிகம் கூறுகின்றது. ஒளிப்பிழம்பும், விளக்கீடும் தோற்றமளிக்கும்போது மாந்தர்களின் நெஞ்சுகளில் அறிவுப் பிழம்பும் அறிவு ஒளியும் திக



வேண்டுமல்லவா? அதனைத் திகழச் செய்வதற்காகவே கார்த்திகை விழாவில் அண்ணாமலையார் ஆலய அதிகாரிகள் அறிவுச் சொற்பொழிவுகளை நிகழ்த்த ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்த ஆண்டிலும் அண்ணாமலையார் திருக்கோயில் சக்தி மண்டபத்தில் அரிய சமயச் சொற்பொழிவுகள் நடைபெற்றன. அப்போது மேலே கூறிய சமய விஞ்ஞான தத்துவச் செய்திகள் வெளியிடப்பட்டன. ஆனால் எத்தனைப் பெயர்கள் அச்செய்திகளைக் கேட்டுத் தெளிவடைந்தார்கள். மிகக்குறைவே. ஆயிரம் பெயரில் பத்துப் பெயர் தெளிவடைந்தாலும போதுமே. ஆனால் இந்தச் செய்தியை ஆராயுங்கள். திருவிழா முடிந்ததும் திருவண்ணாமலையிலிருந்து பாதைவழியாகச் சேலத்திற்கு விசைவண்டியில் சென்றேன். 33 கல் தொலைவில் உள்ள சிங்காரப்பேட்டைச் சாவடியண்டை என் வண்டி நின்றது. அங்கே ஒரு மரத்தின் நிழலில் ஒரு வழிப்போக்கன் தன் மனைவி குழவியோடு இளைப்பாறிக் கொண்டு இருந்தார்கள். அவர்கள் அடைந்திருந்த களைப்பைக் கண்டு இரக்கங்கொண்டு அவர்களின் செய்தியை வினவினேன். தீப தரிசனம் செய்துவிட்டு வண்டியில் திரும்ப வகையின்றி அத்தாய் தகப்பன்மார்கள் குழவியை எடுத்துக்கொண்டு 33 கல்லும் 12 மணி காலம் நடந்து வந்திருக்கிறார்கள். இன்னும் 66 கல் செல்ல வேண்டுமாம். ஏன் யாசகம் எடுத்துச் செல்லலாமே என்றேன். யாத்திரை போவதற்கு யாசகம் எடுப்பது சரியா? புண்ணியம் எல்லாம் போய்விடுமே என்றார்கள். இவர்களுடைய வழிபாட்டு, அன்பு பாருங்கள். இப்படியும் மக்கள் இந்தக் கலிநாளில் இருக்கிறார்களே என்று எண்ணினேன். சக்தி விலாச மண்டபத்துப் பேச்சுகள் இவர்களுக்கு ஏன் வேண்டும் என்று தோன்றிற்று. திருப்பதி யாத்திரிகள் இதனை எவ்வாறு ஏற்பார்களோ? இதனால் அன்றோ திருவண்ணாமலை ஆயிரக்கணக்கில் மக்களை இழுக்கின்றது. ஆராயுங்கள்.

# சித்தாந்தப் பேராசிரியர் மறைவு

சைவ உலகம் ஆற்றிய தவக்குறைவோ அன்றி வேறெதுவோ அறியோம். ஒவ்வொரு திங்களும் சித்தாந்தத்தில் கட்டுரைகள் எழுதத்தொடங்கும்போது சைவப் பெரியார்கள் மறைவுகளைப் பற்றியே முதல் முதலில் எழுத வேண்டியிருக்கின்றது. முதலில் திரு. வி. க. மறைவைப் பற்றி எழுதினோம். பிறகு பெரும் பேராசான் மறைவைப் பற்றி எழுதினோம். அதை எழுத எடுத்த எழுதுகோலின் மை இன்னும் ஆறவில்லையென்றே கூறவேண்டும். அதற்குள் சித்தாந்தப் பேராசிரியர் மறைந்தார் என்ற செய்தி காதைத் துளைத்துக்கொண்டிருக்கிறது. சித்தாந்தம் என்றாலே சிவகுருநாதபிள்ளை அவர்களின் பெயரை நினையாதார் இல்லை. தூத்துக்குடி என்றாலே பிள்ளையவர்களின் திருவுருவமே மனதில் தோன்றும். தூத்துக்குடிச் சைவ சித்தாந்த சபை அன்னாருடைய தூய்மையான வாழ்வின்கண் எழுந்த ஒரு உருவமாக நிலைத்திருக்கின்றது. திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் மடாலயம் என்றால் அவரது நெஞ்சின் ஊக்கத்தில் விளைந்ததொரு ஓவியம் ஆகும். வேறு எந்த ஊரில் எந்தச்சபை நடந்தாலும் நடைபெறாவிட்டாலும் தூத்துக்குடியில் சைவ சித்தாந்த சபையின் ஆண்டுவிழா நடந்தே தீரும். அவ்வாறு நடந்த ஆண்டுவிழாக்களில் இறுதியாக நடந்த ஆண்டுவிழா * * ஆகும். இத்தனை ஆண்டு விழாக்களிலும் சிறந்த புலவர் பெருமக்களை அழைத்து அருமையான சைவச் சொற்பொழிவுகளை நிகழ்த்தச் செய்து திருத்தொண்டு செய்வித்தவர் பிள்ளையவர்களே. சைவ சித்தாந்த சபைக்கும், சைவ நிலையங்களுக்கும், சைவ சமயப் பெருக்கத்திற்கும் இடைவிடாது ஓயாமல் திருத்தொண்டு செய்து வந்தவர் இப்பேராசிரியரே ஆவர். தமது தள்ளாதவயதிலும் ஒரு சிறிதும் தளர்ச்சியடையாமல் எல்லாச் சைவசபைகளுக்கும் சென்று ஓயாமல் விரிவுரைகளை நிகழ்த்திய பெருமான் அவர்களே ஆவர். அத்தன்மைய பெரியார் தமது 81-ம் ஆண்டில் நம்மைவிட்டு இறைவன் அடி அடைந்தார் என்றால் நாம் இயற்றிய தவக்குறைவு என்று கூற வேண்டாமா?

தென்பாண்டி நாட்டில், எட்டையபுரம் என்னும் குறுநில மன்னர் வாழும் ஊரில், சித்தவைத்தியப் பழங்குடியான தொன்மையான சைவ வேளாளர் குடியில் தோன்றி இளவயதிலேயே தமிழும், சைவமும் நன்கு கற்றுச் சித்தாந்தத்தில் புலமையும், தேர்ச்சியும் பெற்றுத் தூத்துக்குடியில் ஒரு கல்விச்சாலையில் தமிழ்ப்பண்டிதர் ஆகப் பல ஆண்டுகள் வாழ்க்கை நடத்திவந்தார். பிறகு அச்சகம் ஒன்று ஏற்படுத்தி அதில் உழைத்துவந்து சைவத்தைப் பரப்பி, சித்தாந்த உண்மைகளை மக்களுக்கு ஊட்டி இறைவணக்கத்தில் யாவரையும் இணங்கவைக்கும் பெரும் நோக்கத்துடன் சொற்பொழிவுகளை நிகழ்த்திவந்தார். சித்தாந்த நூல்களை முறையாகக் கற்பிக்கும் திருத்தொண்டில் எப்பொழுதும் இயங்கிவந்தார். தமிழ் நாட்டில் எந்த இடத்தில் சைவத் திருக்கூட்டம் நடைபெறுகின்றதோ அங்கு எல்லாம் சென்று சொற்பொழிவு ஆற்றிவருவார். தாம் தோற்றுவித்த சம்பந்தர் மடாலயத்தின் நடவடிக்கைகளில் கண்ணும் கருத்துமாக இருந்து அதன் முன்னேற்றத்தையே எப்பொழுதும் போற்றிவந்தார். தமிழ்நாட்டில் இருக்கும் சைவமக்கள் எல்லாரையும் வரவழைத்துச் சொற்பொழிவு ஆற்றச்செய்வார். தாமும் இயற்றிய சொற்பொழிவுகளுக்கும் தலைமை உரைகளுக்கும் அளவேயில்லை. தான் உழைத்து வந்த தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையின் ஆண்டுவிழாக்களுக்கு அந்நகரத்தில் உள்ள சைவர்களை ஒன்று சேர்த்து பொருளை அன்புடன் பெற்று அதனைக் கொண்டு அவைப் பந்தர் தோற்றுவித்தும், பேச்சாளர்களுக்குச் செய்யவேண்டிய வசதிகளைச் செய்தும் ஆண்டுதோறும் வெகு சிறப்பாக விழாக்களை நடத்திவருவார். அந்த விழாக்களில் மங்கையர்க்கெனத் தனிக் கூட்டங்களும், சிறுவர், சிறுமியர்க்கெனச் சொல்லாடல், இசையாடல், கூத்தாடல், முதலியவைகளை நடத்திவைத்து, தக்க பரிசுகளையும் தரச்செய்வார். மடாலயத்தை ஒட்டி நிரந்தரக் கூட்டங்களே யன்றி இளைஞர்களுக்குக் கல்விச்சாலையும் தொடங்கிவைத்து சைவப் பற்றுள்ள பாடங்களையே கற்பிக்கச் செய்வார். ஆடல் பாடல் முதலியவைகளி[illegible]சைவக்[illegible]துக்களையே மிளிரச் செய்வார். இப்படி[illegible] தொண்டி[illegible] இறுதிக்காலம் முழுவதும் கழித்[illegible]தாரென்றால் அ[illegible]ய சைவச்

186897

சிந்தனைக்கு அளவும் உண்டோ? தன் செயலுக்கு ஏற்ற தாக ஒரு தமிழ் அச்சகமும் நடத்திவந்ததில் அது அவருக்குப் பெரும் உதவியாக இருந்தது.

சைவ சித்தாந்த சமாஜத்திற்கும் பிள்ளையவர்களுக்கும் நீண்ட காலமாகத் தொடர்பு உண்டு. சித்தாந்த சமாஜத்தின் 31-வது ஆண்டுவிழாவில் காஞ்சிப் பெருநகரில் நடந்த திருக் கூட்டத்தில் சிவகுருநாதபிள்ளை யவர்கள் தலைமைவகித்துக் கூட்டத்தை நன்குபெற நடத்தினார்கள். அந்த ஆண்டுக் கூட்டம் 1937-ம் ஆண்டு ஜனவரித்திங்கள், 1,2,3-ம் தேதி களில் நடைபெற்றது. காஞ்சி நாராயண சேவாசிரமத்தில் சிவஞானப்பந்தரில் அது நடந்தது முதல் நாள் காலை திரு வேகம்பத்தில் ஆலய வழிபாடு நடைபெற்றதும், மாவடிப் புனிதச் சாயலில் சைவ அன்பர்கள் திருக்கூட்டத்தில் சம்பந்தர் திருமுறையின் இரண்டாம் பதிப்பு வெளியிடப் பட்டது. பிறகு தலைவர் ஊர்கோலமாக அழைக்கப்பெற்று சேவாசிரமத்தில் திருக்கூட்டத்தில் எல்லாச் சிறப்புகளுட னும் வரவேற்கப்பட்டார். வரவேற்புத் தலைவர் திரு. ம. சுவாமிநாத முதலியார் அவர்கள் வரவேற்புரை ஓதிய போது, தலைவர் சிவகுருநாத பிள்ளையவர்கள் தமது தலைமை உரையை நிகழ்த்தினார்கள். அவ்வுரை மிகவும் அருமை யான கருத்துக்களைக் கொண்டது. அதனைச் சித்தாந்தத்தில் முழுதும் கண்டுகொள்க. பிறகு தொடர்ச்சியாக மூன்று நாட்கள் சைவக் கூட்டங்களும், இளைஞர் கூட்டமும் நடை பெற்றன.

மேலே கண்டபடி சைவ சித்தாந்த சமாஜத்தின் ஆண்டு விழாவில் தலைமை வகித்தது மட்டுமன்றி ஒவ்வொரு ஆண்டுக் கூட்டத்திற்கும் பிள்ளையவர்கள் தவறாமல் வந்து சைவத்தைப்பற்றி அருமையான பேச்சுக்கள் நிகழ்த்தி யிருக்கின்றார்கள். மேலும் சமாஜம் நடத்திய கோடைக் கோல வகுப்புகளில் கலந்துகொண்டிருக்கின்றார். முதல் முதலாக நெல்லை வட்டம், பாபநாசத் திருப்பதியில் நடந்த கோடைக்கால வகுப்பை சித்தியாரைப் பாடமாக எடுத்துக் கொண்டு முறையாகப் பாடம் நடத்திவைத்தார். இந்த வகைகளில் சமாஜத்துடன் எப்பொழுதும் தொடர்பு வைத்துக் கொண்டிருந்தார்.



இனி சித்தாந்தத்தைப் பரப்புவதற்குத் தாமாக நேரில்
பாடங்களையும், சொற்பொழிவுகளையும் நடத்திவந்தது
மட்டுமல்ல சைவத்தில் ஈடுபட்டிருந்த பல சைவப் பெரியார்
களுக்கும் புரவலர், புலவர், வித்தகர், புராணிகர், செம்மல்,
கலாவல்லி, வித்தகி, பூஷணம், சிரோன்மணி, தொண்டர்
முதலான பல பட்டங்களையும் அளித்து அதன் மூலம் ஆதர
வாளராகவும் இருந்தார். பிள்ளையவர்களின் திருத்தொண்டு
தென்னாட்டில் மட்டுமல்ல ஈழத்திலும், நடத்தப்பட்டது.
ஈழத்துக் கொழும்பு மாநகரத்தில் உள்ள விவேகாநந்த
சபையின் 35-வது ஆண்டு நிறைவு விழாவில் (29-5-38)
தலைமை வகித்து ஓர் அரிய பேருரையை நிகழ்த்தியிருக்
கின்றார்கள். முழு உரையையும் சித்தாந்தம் மலர் 11,
இதழ் 6-ல் காண்க. அப்பேருரையில் சைவ சமயத்தின்
பழமை, தத்துவ ஆராய்ச்சி, ஏனைச் சமயங்களைத் தழுவல்,
சமயப்பொருள் பற்றிய ஆராய்ச்சி, பொருட் பெருக்கம்,
வேண்டுதல், வாழ்த்து என்ற பகுதிகளில் அரிய கருத்துக்
களை விரித்துரைத்திருக்கின்றார் சித்தியார் கருத்துக்களைத்
திரட்டி ஓர் அரிய ஆராய்ச்சி நூலும் வெளியிட்டிருக்கின்றார்.

பிள்ளையவர்களின் பிறப்புத் திருநாள்கள் ஒவ்வொரு
ஆண்டிலும் தூத்துக்குடி சித்தாந்த சபையாரால் கொண்
டாடப்பட்டுவந்தன. அப்பொழுது அவரது அரிய சேவை
கள் பாராட்டப்பட்டு வந்தன. தமிழ்நாடு முழுவதிலு
மிருந்து கணக்கற்ற சைவப் பெரியார்கள் அவரது சேவை
களைக்கூறி வாழ்த்துரைகளை அனுப்பிவந்திருக்கின்றார்கள்.
தமது 78-வது ஆண்டில் அவர் 1000-பிறைகண்ட அந்தணா
ளராக விளங்கினார். அதுபோது அவருக்கு கோளறு
பாசுரங்களாக வான்விளி என்ற ஒரு அரியபாமாலை சூட்டப்
பெற்றது. அப்படிப்பட்ட வாழ்த்துப்பாக்கள் அவரைச்
சிறந்த, உயர்ந்த நிலையில் ஏற்றிவைக்கின்றன.

இப்படிப்பட்ட சைவ சித்தாந்தப் பேராசிரியர் நம்மை
விட்டு நீங்கி இறைவன் திருவடி அடைந்திருக்கின்றார்கள்.
அதற்காகத் தமிழ்நாடு முற்றும் ஆராத்துயரில் அமிழ்ந்திருக்
கின்றது. பேராசிரியருடைய ஆன்மா இறைவனுடைய
திருவடியில் பேரின்பமும், சாந்தியுமுற்று சைவர்களுக்கு
இன்றியமையாத எடுத்துக் காட்டாக விளங்கிக் கொண்
டிருப்பதாகுக.

—கோவைகிழார்

## பண்டிதமணி கதிரேசஞ் செட்டியார்

பாண்டிய நாட்டின் பல்பதி தன்னுள்
கணியன் வாழ்ந்த பூங்குன் றூருறு
தாரணி போற்றும் தனவை சியர்தாமும்
தமிழரும் பெற்ற தண்டமிழ் ஆசான்
செட்டி யாம்மகிபாலன் பட்டியில்
புதுமணம் பரப்பவும் புத்துயிர் அளிக்கவும்
புலவர் மரபதில் புகழுடன் தோன்றியே
தென்மொழி வடமொழி என்றிரு கண்களால்
வங்க முறுகடல் வேதம் கண்டபின்
நுண்ணிய அறிவதும் நுணங்கிய கேள்வியும்
தெள்ளிய மதியதும் தென்மொழிப் பண்பதும்
செவ்வி தின் திகழவே எண்ணில் நூல்களும்
உள்ளம் நிறைந்திட உவப்புடன் அளித்து
மறையதன் பொருளெனும் மணிவா சகமதன்
உரைதனை ஆக்கியே உலகவர் உய்ந்திட
விரைவினில் அளித்ததை விண்ணவர் பொருது
மண்ணவர் கொண்டுமல் மருள்தனைப் பெருக்கவும்
சிவநெறிச் சைவர்தம் சித்தங் கலங்கவும்
தாய்மொழித் தருக்கிலாத் தமிழர் தவிக்கவும்
பண்டித மணியெனும் புகழுரு பெறவும்
" செம்மல் சீர்க்கதி ரேசஞ் செட்டியே
எழுமென " விருப்புடன் எதிர்கொண்டழைத்தனர் ;
அதனாற் போலும் அகன்றனை ஐய !
மீளுக பண்டித ! மீளுக மணியே !
முற்றுக வாசகம் ! வெற்றியே தருக !
பாரவர் போற்றவே பல்கலை பல்கவே.

—ஆர். இராஜரத்தினம்.

---



## திருச்சோபுரம்

1. இடம் :—தென் ஆர்க்காடு வட்டத்தில் கூடலூருக்கும் பரங்கிப்பேட்டைக்கும் இடையில் உள்ள ஆலப்பாக்கம் என்னும் இரயிலடியிலிருந்து கிழக்கே இரண்டு மைல் தொலைவில் இவ்வூர் இருக்கின்றது. இடையில் உப்பனாறு என்ற கடற்கழியைக் கடக்க வேண்டும். இவ்வாறு ஒரு பர்லாங்கு அகலமும் இருபது மைல் நீளமுமுள்ளது. ஆற்றின் கீழ்க்கரையில் அவ்வாற்றிற்கும் கடலுக்கும் இடையில் இவ்வூர் கட்டப்பட்டுள்ளது. ஊரில் 500—வீடுகள் உண்டு. இடையிடையில் மணல் திடல்களும் சவுக்குச் சோலைகளும், முந்திரித் தோப்புகளும், பள்ளமடைகளில், நெல்வயல்களுமிருக்கின்றன. கோயிலைச்சுற்றி நான்கு தேரோடும் வீதிகள் இருக்கின்றன. அவைகள் மணற்பாதைகளாயிருந்தாலும், தேர் சிறியதாய் உள்ளபடியால் எளிதில் செலுத்தப்படுகின்றது. ஊரில் தற்காலப்பெயர் தியாகவல்லி என்பது. அதில் கோயில் உள்ளபகுதிக்குத் திருச்சோபுரம் என்ற பெயர்.

2. கோயில் :—கோயிலானது மணல் திடல்களின் இடையில் கட்டப்பட்டுள்ளது. கர்ப்பக்கிரகம் கருங்கல்லால் ஆக்கப்பட்டுள்ளது. சுற்றுப்பக்கங்களில் கருங்கல் என்பது கிடையாது. அவைகளை உப்பனாற்றின் மேற்புறத்தில் வெகுதொலைவிலிருந்து தான் கொண்டுவந்திருக்கவேண்டும். கோயிலின் மற்றப் பகுதிகள் செங்கல்லால் கட்டப்பட்டுள்ளன. கடலிலிருந்து அடிக்கும் உப்பங்காற்றினால் செங்கற் சுவர்கள் சேதமடைந்திருக்கின்றன. இவைகளை சிமெண்ட் காரையினால் பழுது பார்க்க வேண்டியது அவசியம்.

3. ஆலய அமைப்பு :—ஆலயம் மேற்கு நோக்கியுள்ளது. அம்மன் சந்நிதி தெற்கு நோக்கி யிருக்கின்றது. சண்டேசுவரர் கோயில் சிறிது கிழக்கே தள்ளி யிருக்கிறது. சுற்றிலுமுள்ள மண்டபத்தில் பரிவார தேவதைகள் வைக்கப்பட்டுள்ளன. இரண்டு உற்சவ மூர்த்திகள் நிலத்தை அகழ்ந்தபோது கிடைத்தன. வடகிழக்கு மூலையில் திரிபுவனசக்கரவர்த்தி, அவனுடைய தேவியான தியாக

வல்லி என்பவர்களுடைய உருவங்கள் வைக்கப்பட்டுள்ளன. இக்கோயிலைப் புதுப்பித்தவள் தியாகவல்லி என்ற இராஜமா தேவியார். அவருடைய பெயராலேயே இந்த ஊரும் வழங்கி வருகின்றது. இக்கோயிலில் கண்ணப்பர் திருவுரு தாபிக்கப் பட்டுள்ளது. இதன் காரணம் விளங்கவில்லை. அருகிலே திருமூலலிங்கம் என்ற ஒரு லிங்கம் இருக்கின்றது.

4. மூர்த்திகள் :—இறைவன் பெயர் சோபுர நாதர்; இறைவியின் பெயர் சோபுர நாயகி. இப்பெயர்களை வட மொழியில் மங்கள புரீசுவரர், செளந்தர்யநாட்சி என்று முறையே வழங்குகிறார்கள். இந்தத் தலத்தேவாரத்தில் தேவியின்பெயர் வேல் நெடுங்கண்ணி என்று கூறப்பட்டுள்ளது. இந்தத்தலத்தில் அகஸ்தியர் பூசித்ததாகச் சொல்லுவார்கள்.

5. பொருள் வருவாய் :—இவ்வாலயத்திற்கு 175 ஏக்கர் நிலமுண்டு. பெரும்பாலும் மணல். அதில் 12 காணி நஞ்சை. நிலத்தில் 500 ரூபாயும், தஸ்தீக்கில் 600 ரூபாயும் வருமான முண்டு.

இந்தத் தலம் பாடல் பெற்றது. சம்பந்த சுவாமிகளுடைய "வெங்கணானை யீருரிவை" என்ற பதிகமுண்டு (முதல் திருமுறை). பண்டைய ஆலயம் வெகுநாளாக மணலால் மூடப்பட்டிருந்தது. இரண்டு மூன்று நூற்றாண்டுகளுக்கு முன் மதுரை திருஞானசம்பந்தர் மடாலயத்து இராமலிங்க சிவயோகிகள் என்ற தம்பிரான் இத்தலத்தை விஜயம் செய்தபோது அங்கே மணல் மேட்டிலே விமானச் சிகரம் ஒன்று தெரியக் கண்டார். அந்த இடத்தைக் கோவில் மேடு என்று மக்கள் கூறினார்கள். மணலைத் தோண்டிப் பார்க்கக் கோயில் தென்பட்டது. அப்போது கூடலூரிலிருந்த ஆயிரங் காத்த முதலியார் நஞ்சலிங்க செட்டியார் என்ற இரண்டு தனவான்களைத் தூண்டிக் கோயிலுக்குத் திருப்பணி செய்வித்தார். இந்த வகையில் இக்கோயில் வெளிப்படுத்தப்பட்டது.

6. ஐதீகம் :—இக்கோயிலைச் சுற்றி எட்டு மூலைகளில் எட்டு லிங்கங்கள் இருந்தனவாம். தற்போதிருப்பன ஆலப்பாக்கம் புஞ்சைமேடு, தொண்டைமான் நத்தம், அங்கலப் பட்டி என்பன. தல புராணம் இப்போது கிடைக்கவில்லை. கோயில் சாமான்களில் ஆலமடத்துச் சுவாமி என்று எழுதப்பட்டிருக்கின்றது. அவர் யார் என்று தெரியவில்லை. கோயிலின் வடவண்டை குருக்கள் வீடும், ஒரு சத்திரமும் இருக்கின்றன.



7. கல்வெட்டுக்கள் :—இக்கோயிலில் ஐந்து கல்வெட்டுக்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளில் நான்கு பாண்டியர், ஒன்று சோழர் கல்வெட்டுக்களாகும். சோழர் கல்வெட்டு திரிபுவனசக்கரவர்த்தி இராஜ இராஜ தேவனுடையது. பாண்டியர் கல்வெட்டுக்களில் சுந்தர பாண்டியன் கல்வெட்டு இரண்டும், விக்கிரம பாண்டியன் கல்வெட்டு இரண்டும் இருக்கின்றன. சுந்தர பாண்டியன் பெயரில் சந்தி ஒன்று நடத்த நிலம் தரப்பட்டது. மற்ற கல்வெட்டில் சாரி புத்திர பண்டிதன் என்ற பெயர் குறிக்கப்பட்டுள்ளது. சம்பந்தர் காலத்தில் சாரி புத்திரன் என்ற ஒரு பௌத்தன் இருந்ததை அறிவோம். விக்கிரம பாண்டியன் கல்வெட்டுக்கள் 13ம் நூற்றாண்டினவை. ஆறும் கல்வெட்டுத் தமிழ்ச்செய்யுள் வடிவிலிருக்கின்றது. ஒரு தொண்டமான் சோழனுக்கு முடி அளித்த செய்தி கூறுகின்றது. தொண்டமானல்லூர் என்ற ஊரும் தானம் செய்யப்பட்டது.

—கோவைகிழார்

---

# சங்கற்ப நிராகரணம்

[புலவர் முருகவேள், பி.ஓ.எல்.]

(முற்போக்குடர்ச்சி மலர் 26 ; இதழ் 11 ; பக்கம் 518)

## 9. சிவசமவாதி சங்கற்பம்

இங்ஙனம் பேதவாதியின் கொள்கைகளை மறுத்த சிவசமவாதி பின்னர்த் தனது கொள்கைகளை எடுத்துக் கூறுகின்றான்: பதி பசு பாசம் எனப்படும் முப்பொருள்களுக்கும் பதிஞானம் பசுஞானம் பாசஞானம் என்னும் மூவகையான ஞானமும் பழைமையாகவே உள்ளன. பாசஞானம் சுவையொளியூறோசை முதலிய நுகர்பொருள்களை அறிவித்து நிற்கப் பசுஞானமானது தன் பொறிகளின் வாயிலாக

அவைகளை அறிந்து நுகர்ந்துவரும். பாசஞான பசுஞானங்கள் நீங்கியவழி, உயிரானது 'எரியாச் செந்தழல்' போலும் நிலையில் அறிவின்றிக் கிடக்கும். அதுபோழ்து உயிர் அறியும் தன்மையுடையதெனினும், அதற்கு இஃது என்று ஒரு பொருளையும் சுட்டியறியுந் திறன் இல்லையாகும். இஃது உயிர்களின் கட்டுநிலை.

இவ்வாறு கட்டுநிலையில் நாடோறும் கேவல சகல அவத்தைகளை எய்திவரும் உயிரினை, ஒன்றும் அறியாமற் கிடக்கும் பச்சைப் புழுவினைக் குளவியானது (வேட்டுவாளி) வந்து பற்றுதல் போல, பதிஞானமானது வந்து பற்றும். பச்சைப்புழு தன்னைப் பற்றி எடுத்துச் சென்ற குளவியினையே நினைத்துக் கொண்டிருந்து அக்குளவியின் உருவத்தினைப் பெறும் தன்மைபோல, உயிரும் தன்னை வந்து பொருந்திய சிவஞானத்தால் சிவத்தையே நினைந்து தியானம் செய்து, அச்சிவத்தின் இயல்பினை எய்தும். குளவியின் உருவம் பெற்ற புழு அக்குளவி செய்யும் தொழில்களை எல்லாம் தானும் செய்யவல்லதாய், அக்குளவி யுருவம் நீங்காமல், முன்பேயுள்ள குளவிகளின் கூட்டத்தில், தானும் சென்று சேர்ந்திருக்கும் தன்மை போல — சிவத்தின் இயல்பினைப் பெற்ற உயிரும், சிவத்தின் ஐந்தொழில்களியற்றுந் திறனையும் முற்றறிவியல்பினையும் பெற்றுநின்று, சிவத்தின் இயல்பு மாறாமல், முன்னரே வீட்டுநிலை எய்திச் சிவத்தோடொப்ப விளங்கும் ஏனை நல்லுயிர்களோடு தானும் சென்று கூடிநிற்கும். இஃது உயிர்களின் வீட்டுநிலையாம் எனச் சிவசமவாதி கூறிமுடித்தான்.

## 10. சிவசமவாதி நிராகரணம்

சிவசமவாதி தன் கொள்கைகளைக் கூறிமுடித்ததும், அடுத்திருந்த சங்கிராந்தவாதி அவற்றை மறுத்துரைக்க முற்படுகின்றான் : பதிஞானம் பசுஞானம் பாசஞானம் என்னும் மூவகை ஞானமும் ஓரொரு நிலையில் ஒவ்வொன்றாகச் செயற்படுதல் அன்றி ஓரேநிலையில் மூன்றும் சேர்ந்து செயற்படுதல் இல்லை. செயற்படுமாயின், கண்ணானது அழகிற் சிறந்த பொருள் ஒன்றனைக் காண்புழி ஞாயிறு திங்கள் விளக்கு என்னும் மூன்றனுள் ஒன்று அதனைக் காட்டக் காண்பதன்றி, அம்மூன்றும் ஒருசேரக் கூடிநின்று



காட்டக் காண்பதில்லை. ஆதலின் மூவகை ஞானமும் கூடிநின்றே ஒருபொருளை அறியவேண்டும் எனக் கூறிய நின் கருத்து அமையாது.

அற்றன்று, மூவகை ஞானங்களும் ஒவ்வொன்றாகத் தனித்தனியே ஒவ்வொரு செய்தியை அறிந்துவரும் எனில், உயிர்களுக்கு அவற்றின் நுகர் பொருள்கள் வேறாய் இருத்தலினால், உயிரறிவு தானாக ஒரு பொருளையும் அறியமாட்டாது. பொறிபுலன்கள் அறிவற்றனவாய் இருத்தலின், பாசஞானம் தானாக எப்பொருளையும் அறியவல்லதன்று. பதிஞானம் தொன்மையாகவே பேரறிவினதாக விளங்குதலால், முதல்வனுக்குப் புதிதாக உலகியற் பொருள்களைச் சுட்டியறிய வேண்டுவதில்லை. கருவிகளெல்லாம் நீங்கி ஆணவ மலத்தினாலே மறைக்கப்பட்டிருக்கின்ற நிலையில் உயிரானது எதனையும் அறியாமல் 'எரியாச் செந்தழல்' போலக் கிடக்குமாயின், எஞ்ஞான்றும் தன்னைவிட்டு நீங்காமல் எப்பொழுதும் தன்னோடு பிரிவறக் கலந்துநிற்கும் இறைவனை உயிரானது தெரிந்து கொள்ளாத குற்றம் நேருமாதலின், கட்டுநிலை பற்றிய நின் கொள்கை பொருந்துவதன்று.

மேலும், உயிரானது சிவத்தோடு கூடி ஒப்பநிற்கும் வீடுபேற்று நிலைக்கு, முன்னே ஒன்றும் அறியாமல் கிடக்கும் பச்சைப் புழுவைத் தன்னுடைய உருவமாகவேண்டும் என்றெடுத்துச் சென்ற குளவியின் இயல்பை உவமை கூறுதல் அமையாது. சிவம் உயிர்களுக்கு மந்திரங்களை அறிவுறுத்துத் தன்னுருவமும் இயல்பும பெறச் செய்வது போல, குளவியானது புழுவை எடுத்துக் கொண்டு சென்று தனது கூட்டுக்குள் வைத்து எத்தகைய மந்திரத்தினையும் அறிவுறுத்துத் தன்னுருவமும் இயல்பும் பெறச் செய்வதில்லை. ஆதலின், குளவியையும் புழுவையும் வீடுபேற்று நிலைக்கு உவமை கூறியது புரைபடும்.

அற்றன்று, குளவி எடுத்துக்கொண்டு சென்றதொன்றே அறிவுறூஉ (உபதேசம்) வாகப் பச்சைப்புழு குளவியுருவம் பெற்றதெனின், கருமயிர்க்குட்டிப்புழு (கம்பளிப்பூச்சி) வானது தனது வாயின் நூலாலே கூடு கட்டி அதற்குள்ளே யிருந்து சிலநாட் சென்ற பிறகு சிறகினையுடைய பறவையாகப் பறந்து செல்லக் காண்கின்

றோர். ஆயின், அதனைக் குளவியோ அன்றி வேறெதுவோ வந்தெடுத்துச் செல்வதாகவும் மறைமொழிகள் புகல்வதாகவும் எவரும் கூறக் கேட்டிலம். ஆதலின்,

“ வண்டுக ளாகி மாறும் மயிர்க்குட்டி, மற்றோர் செந்துப்
பண்டைய உருவந் தானே வேட்டுவ னாய்ப்பி றக்கும் ;
கண்டுகொள் ! யோனி எல்லாம் கன்மத்தால் மாறும் என்றே
கொண்டன சமயம் எல்லாம் ! இச்சொல்நீ கொண்டதெங்கே ?

என்றதற்கேற்ப, பச்சைப்புழு குளவியாகவும் கம்பளிப்புழு வண்ணத்துப் பூச்சியாகவும் தத்தம் கன்மத்துக் கீடாக அச்சு (உடலமைப்பு) மாறுதலை வீடுபேற்று நிலைக்கு உவமை கூறியமை தகுதியன்று.

அன்றியும், பச்சைப்புழு குளவியாக மாறுதல் போல உயிரும் சிவத்தின் இயல்பினைப் பெறும் எனக் கூறிய நின் கருத்தினைச் சிறிது நுனித்தாராய்வுழி, அவ்வுவமை யோக நிலைக்குப் பொருந்துவதே யன்றி ஞானநிலைக்கு அமைவதன்று. ஏனெனில், உயிரும் சிவமும் கூடி ஒன்றுபட்டு நிற்பதே வீடுபேறு என்று நூல்களெல்லாம் முழங்கவும், நின் கூற்றின்படி உயிரும் சிவமும் வேறுபட்டிருக்கும் என்பது பெறப்படுதலின் அது குற்றமே யாம். மேலும், புழுவானது தன் நினைவால் குளவியின் உருவமும் இயல்பும் பெறுதல் போல, உயிரும் தன் தியானத்தால் வீடுபேற்று நிலையில் புதியதோர் உடலைப் பெறுதல் வேண்டும்! அவ்வாறு வீட்டு நிலையிற் புதியதோர் உடலினை எய்திய வழியும் சிவத்தோடு கூடி ஒன்றி நிற்கும் பேறு பெறமாட்டாமல் வேறுபட நிற்றலே உயிர்க்கு நேருமாயின், அத்தகையதொரு மிக எளிய நிலையை வீடுபேறென்றல் பொருளில் கூற்றாகவே முடியும். இம்மட்டோ! குளவியின் உருவமும் இயல்பும் பெற்ற புழுவானது, அங்ஙனம் பெற்றதற்குப் பின்பு முன்னர்ப் புழுவாக இருந்த நாம் இப்பொழுது குளவியின் உருவமும் இயல்பும் எய்திக் குளவிக்குரிய இத்தொழில்களைச் செய்யும் பேறுபெற்றோம் என நினைந்து பெருமித இன்பம் கொள்ளும் பெற்றியினதன்றாதல் போல — சிவத்தின் இயல்பினைப் பெற்ற உயிரும், அங்ஙனம் பெற்றதன் பின்பு முன்னர்ச் சிற்றுயிராக இருந்த நாம் இதுபோழ்து சிவத்தின் இயல்பினைப் பெற்றுச் சிவத்திற்



குரிய ஐந்தொழிலியற்றுந் திறனையும் முற்றறிவியல்பினையும் பெற்றுள்ளோம் எனவுணர்ந்து பெருமிதங் கொள்ளும் அறிவிலதாதல் வேண்டும்! அவ்வறிவிலதாய வழி, “ஞானத்தால் வீடென்றே நான்மறைகள் புராணம் நல்ல ஆகமம்” எல்லாம் சொல்லுதலின், அவ்வுயிர் எய்தியது வீடுபேறே யாகாதொழியும்! எனவே, வீட்டு நிலையில் உயிரானது ஓர் உடலோடு கூடியிருக்கும் என்னும் நின் கொள்கை பலவகையிற் பிழைபாடுடைத்தாம்.

உயிர்கள் வீட்டு நிலையில் சிவத்தோடு சமநிலையில் ஒப்ப நின்று ஐந்தொழிலியற்றி நிற்கும் என மொழிந்தாய்! நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்த அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கமெலாம், தன்னொடு நோக்க இல் நுழை கதிரின் துன்னணுப் புரையச் சிறியவாகப் பெரியோனாய சிவத்தினால் செய்யப்படும் ஐந்தொழில்களை, அணுவுக்கும் அணுவாயுள்ள சிற்றுயிர்கள் செய்யும் என்பது சிறிதும் ஏற்புடைத்தாகாது. நம்பியாரூரர் முதலையுண்ட மதலையை மீட்டும் உயிர்பெற்றெழுந்துவரச் செய்தனரல்லரோ எனின், “கரைக்கான் முதலையைப் பிள்ளைதரச் சொல்லு காலனையே” என அவர் இறைவனை வேண்டி நின்றதன்றித் தாமே தன்முனைப்பால் அங்ஙனம் செய்யப் புகுந்தாரல்லர்! இரும்பானது நெருப்போடு கூடி நெருப்பின் உருவத்தைப் பெற்றபோழ்து அந்நெருப்புச் செய்யும் தொழில்கள் எல்லாவற்றையும் இரும்புசெய்தல் போல, உயிர்கள் இறைவனோடு கூடி இறைத் தன்மை பெற்றபோது அவ்விறைவன் செய்யும் தொழில்களைச் செய்தல் கூடும் எனின் — தண்ணீரானது நெருப்போடு சேர்ந்து எத்துணைதான் வெம்மை பெற்றதாயினும் அந்நெருப்பைப் போல் பிறபொருள்களை எரிக்கும் தன்மையுடையதாகாமை சிறுமகாரும் அறிவர். நெருப்பைச் சேர்ந்த இரும்புபோல வெந்நீர் சிறு வைக்கோலையும் எரிக்கவல்லதன்று. நெருப்பின் வெம்மை அதனோடு மாறுபட்ட தண்ணீரோடு கூடிய காரணத்தால் பிறபொருள்களைச் சுட்டெரிக்கும் வன்மை இழந்து நின்றதெனின் — நெருப்பு எங்கேனும் தான் தனியே தொழிற்பட்டதுண்டாயிற் கூறுக. “அங்கியும் ஒன்றைத் தங்கினின் றல்லது தன்தொழில் நடத்தாது” என்றறிக. நெருப்பு இரும்பைச் சார்ந்து நின்று தன்னுடைய

தொழிலைச் செய்து சென்றதன்றி, இரும்பு நெருப்பின் தொழிலைச் செய்யுந்தன்மை யாண்டும் இல்லை.

ஒரு பேயானது ஒருவனைப் பற்றிக் கொண்ட போழ்து அப்பேயின் செயல்கள் எல்லாம் இவனுடைய செயல்களாகக் காணப்படுகின்றன அல்லவோ? ஆதலின் அருளைப் பெற்ற உயிர்கள் ஐந்தொழில்கள் இயற்றும் எனின் — சிவம் இவ்வுயிராய் இருந்து தன் தொழில்களைச் செய்யுமாயின், இவ்வுயிர் அச்சிவத்தின் தொழிலைச் செய்தற்கு எதனைப் பற்றுக் கோடாகக் கொள்ளும்! ஐந்தொழில்களைச் செய்தற்கு உயிர்கள் உரியனவாம் எனில் — ஒருவனைப் பேய் பற்றிக் கொண்டிருந்து பின்னர் அவனை அந்தப் பேய் விட்டு நீங்கிய நிலையில் நிகழும் செயல்களெல்லாம் இவனுடைய செயல்களோ? அன்றி அப்பேயின் செயல்களோ? இவனது செயல்களே யாமாயின் அப்பேய் பிடித்துக் கொண்டிருந்த பொழுது இவன்செய்த தொழில்கள் எல்லாம் அப்பேயின் செயல்களே என்றறிதல் வேண்டும். அங்ஙனம் அறிந்தால், பேய் கோட்பட்டான் வாயிலாகப் பேய் தன் செயல்களை வெளிப்படுத்திச் செல்லுதல்போலவும், இரும்பைப் பற்றிநின்று நெருப்பானது தன் செயல்களைச்செய்து கழிதல் போலவும், சிவமும் உயிரின் பாற் பதிந்துநின்று தன்செயல்களை நிகழ்த்துதலன்றி, உயிர் சிவத்தின் தொழிலைச் செய்யமாட்டாது என்பது தெளியப்படும். அன்றியும் சிவமோ எஞ்ஞான்றும் அழிவில்லாத பேராற்றற் பெரும் பொருள் ; உயிரோ இமைப்பொழுதில் மறைந்தொழியும் எளிய சிறு பொருள் ; ஆதலின் இத்தகைய உயிர் சிவத்தின் ஐந்தொழில்களைச் செய்யவல்லதாம் என்பவர்கள் “ மைத்துனர் பல்கி மருந்திற் றெளியாத பித்தர் என்றே எள்ளப்படுவர்.” எனவே, “ உம்பர்பிரான் உற்பத்தி யாதிகளுக்கு உரியன், உயிர்தானும் சிவானுபவம் ஒன்றினுக்கும் உரித்து ” என்பதே முடிந்த முடிபாம்.

வீட்டு நிலையில் உயிர்கள் ஐந்தொழில் நிகழ்த்தலேயன்றி முற்றறிவும் உடையன ஆகும் என்று கூறினாய்! “ மயக்கமதுற்றும் மருந்திற்றெளிந்தும் பெயர்த்துணர்ந்து ’ வரும் இயல்பிற்றாய உயிர்க்கு, எல்லாவற்றையும் ஒருங்கே அறியுந் தன்மை உளதாகாது. எல்லாவற்றையும் அறியும் இயல்பினதாகிய திருவருள் உயிரின்பாற் பதிதலால், உயிர்



எல்லாவற்றையும் அறிய வல்லதாகும் என நீ கூறின் — உயிர்களைச் சிற்றறிவேயுடையன என்று அறிவுநூல்கள் கூறுதல் பிழைபாய் முடியும். பேய்கோட்பட்டார் அப்பேய்க்குண்டாகிய எதிர்கால நிகழ்ச்சி யறிவையெலாம் தங்கண்பாற்கொண்டு உரையாடக் காண்கின்றனமே எனில் — ஊமையாய்க் குருடனுமாயினான் ஒருவன்பால், ஊமையும் குருடும் அல்லாத பேய் போந்து பொருந்திய வழி, அவன் நாவால் ஒன்றைச் சொல்லியதும், கண்ணால் ஒன்றைக் கண்டதும் இல்லை. ஆதலின், பேயின் தன்மை யெல்லாம் பேய்கோட்பட்டானுக்கு நிகழும் என்றல் ஒல்லாது. “ ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடலில் நாழி முகவாது நானாழி ” யாதல்போல, திருவருட் பேரறிவோடு கூடி நின்றதேயாயினும், உயிருக்குள்ள சிற்றறிவே அதற்கு நிகழ்வதன்றி, இறைக்குரிய முற்றறிவு அதன்கண் நிகழ்தல் இயலாது. ஒளி என்னும் பொதுமையால் ஒத்து ஒன்றாமாயினும், பிறிதொரு துணையை இன்றியமையாதாய் அதுவதுவாய் நோக்கிக் காணும் கண்ணொளிக்கும், அதுபோலத் தனக்கொரு துணை வேண்டாது தானே பிறவற்றிற்குத் துணையாய் எல்லாவற்றையும் ஒருங்கே விளக்கி நிற்கும் ஞாயிற்றினொளிக்கும் தம்முள் வேற்றுமை பெரிதாயினாற்போல, வீட்டு நிலையினும் உயிரின் சிற்றறிவிற்கும் சிவத்தின் முற்றறிவிற்கும் உள்ள இடையீடு மிகப்பெரியதாகும்.

“ புலரும் அசத்தர் தம்பால் பொருந்திப அலகை யேபோல்,
அகிலமும் உணரும் ஈசன் அருளுயிர் மேவ லாலே,
சகலமும் நிகழ வேண்டும் ; தலைவன்ஐந் தொழிலுந்தானே
இகலற இயற்றல் வேண்டும் என்றது, நன்றி இன்றே.”

இன்றுநோக் குரைந டக்கும் இபல்பிலோற்கு, இனைய வாய்ந்து
நின்றதோர் அலகை நேர்ந்தால் நிகழ்வதென்? அதுபோல் உள்ளத்
தோன்றிய உணர்வு தம்பால் உள்ளது நிகழ்த்தும் ; ஈசன்
தன்தொழில் நடாத்தும் மேனி தனக்கெனக் கொண்டு தானே.

எனவரும் சிவப்பிரகாசச் செய்யுள்களும், அவற்றின் பொருளும் கண்டு அறிதற்குரியன.

வீடுபேற்றில் உயிரும் சிவமும் ஒன்றாய் விடும் எனில், இரண்டு பொருள்களுள் ஒன்று அழிந்துபோம் ; அழியா

தெனில், இரண்டு பொருள்களும் ஒன்றுதலில்லை. இனி, அங்ஙனம் ஒன்றுதலாகிய பரமுத்தி எய்தாமல் உடலோடு கூடிச் சீவன்முத்தனாய் நிற்கும் எனின், "தனக்குவமை இல்லாத" சிவத்திற்குச் சீவன்முத்தனாய அவ்வுயிர் சமம் எனப்படும் நிலை எய்துமாகலின், அஃது அமையாது. வீடுபேறு எய்தும் உயிர், முன்னரே வீடுபேறு எய்தியுள்ள நற்றவர் கூட்டத்தின்கண் சென்று சேரும் எனின்—அது சிவப்பேறடைவு ஆகிய சாயுச்சிய முத்தியாகாமல், சிவனுலகிற் சேர்தல் என்னும் சாலோக முத்தியே யாகும். மேலும், அவ்வுயிர் நற்றவர் கூட்டத்தின்கண் சென்று சேர்தற்கு ஓர் உடல் இன்றியமையாது வேண்டப்படும். உயிர் உடலோடு கூடியிருக்குமாயின், அங்ஙனம் இருக்கு மட்டும் அது வீடுபேறு எய்தியதெனப் படாது. இறைவன் திருவருளைப் பெற்றவர்கள் உடலோடு கூடியிருந்தார்களாயினும், அவர்கட்கு உடற்றொடர்பும் பற்றும் இலவாய், அவர்கள் தம் "உடம்பும் மிகை" எனவே கருதியிருப்பர். அற்றன்று, வீடுபேற்றில் உயிர்கள் அசுத்த மாயா சரீரத்தினைப் பொருந்தாமல், சுத்தமாயா சரீரமே பெற்று நிற்பர் எனின்—அறியாது கூறினாய்! மும்மலங்களும் நீங்கி வீடுபேறு பெற்ற நிலையில் ஓருடல் தோன்றும் என்ற நின் கூற்று, தலைமுறை பலவாக உரலில் நெற்குற்றி வரும் ஓர் உலக்கையின் நுனியில், கவடும் கோடும் தளிரும் மலரும் தோன்றிற்று என்றாற் போன்ற பொருந்தாக் கூற்றேயாம். அற்றன்று, வீடுபேறு பெற்ற உயிர்கள் தம் விருப்பத்தினால் தாமாகவே ஓருடலைத் தோற்றுவித்து அதன்கண் பெரிதும் விருப்புற்று வாழும் எனின்—நன்று மொழிந்தனை! ஒருவனுக்கு ஓருடல் தோன்றுமெனின், அது கன்மத்தாலன்றித் தோன்றாது; அக்கன்மந்தானும் ஆணவமலங் கிடந்தாலன்றி உண்டாகாது. எனவே, நீ கூறும் வீட்டு நிலையில் ஆணவம் மாயை கன்மம் என்னும் மூன்றனுள் ஒன்றேனும் நினக்குக் கழிந்த தில்லையாம். ஆதலின் நினது வீட்டியல்பினைச் சிவனுலகு சேர்தல் சிவனுருப் பெறுதல் சிவனருகிருத்தல் எனப் பொருள்படும் சாலோக சாமீப சாரூபம் என்னும் பதமுத்திகளாகவே அறிஞர்கள் கொள்ளுகிற்பர். இங்ஙனம் பிழைபடப் பலவுரைத்த நீ, இனி யான் கூறுமவற்றைக் கருத்திருத்திச் செவிமடுத்து



நலம் பெறுக எனக் கூறலுற்றான் – இப்பகுதியின்கண் ஆசிரியர் மாதவச் சிவஞான சுவாமிகள் தமது சிவஞான போதப் பேருரையில் ஆறும் சூத்திரம் இரண்டாம் அதிகரணத்தின்கண், சிவசமவாதக் கொள்கைகளை எடுத்துரைத்தும் அவற்றை மறுத்துரைத்தும் விளக்கியுள்ள திறம் அறிந்தின்புறற்பாலது.

---

# நமது சிற்பக்கலை

[ம. ரா.]

மானுடன் தன்னுடைய எண்ணப்போக்கு அல்லது கருத்தின்போக்கைப் பிறர்களுக்கு அறிவிக்க ஒரு பருப்பொருளில் உருவப்படுத்துவதே சிற்பமாகும். தன் கருத்தை அவன் எழுத்தில் வெளியிடலாம், பேச்சில் கூறலாம். பேச்சில் கூறுவது சில பேர்க்கே, அதாவது கேட்டவர்களுக்கே அறிவுறுத்தும். எழுத்தில் எழுதுவது படித்தவர்களுக்கே அறிவுறுத்தும், இவ்விரண்டும் விரைவில் அழிந்துபோகக் கூடியவை. ஆனால் பருப்பொருளில் அமைத்தால் அக்கருத்து வெகுநாள் நீடித்திருக்கும். பின்வருபவர்களுக்கும் பயன்படும். அப்பருப்பொருள் பெரும்பாலும் கல், மரம், மண் என்பவைகளாக இருக்கலாம். இவ்வகைச் சிற்பங்கள் எக்காலத்திலும், எல்லா மக்களிலும் உண்டு. உதாரணமாக, ஆபிரிக்கர், பண்டைய அமெரிக்கர் மரங்களிலும் கற்களிலும் உருவங்களைத் தீட்டிவைத்திருக்கின்றார்கள். அசிரியர், சிந்து நதியர், களிமண்ணில் உருவங்களைச் செய்துவைத்திருக்கிறார்கள். கிரேக்கர், உரோமானியர் கல்லிலும், பளிங்கிலும் செய்துவைத்திருக்கிறார்கள். வடநாட்டில் கல்லில் சமய நிலையங்களை அமைத்திருக்கிறார்கள். தென்னாட்டில் கல்லும், மரமும், பயன் படுத்தப்பட்டிருக்கின்றன. இவையெல்லாவற்றிலும் தென்னாட்டுக் கலை ஒரு சிறப்பானதும் தனித்த தன்மை உடையதாகவும் இருக்கின்றது. அதைப் பற்றி ஒரு சிறிது விவரிப்போம்.

தென்னிந்திய சிற்பக்கலை மிகவும் பழமையானது. அது ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முந்தியே

தொடங்கி வளர்ச்சிபெற்று வந்திருகின்றது. தென்னிந்திய மக்கள் எப்பொழுதும் சமயச்சார்பு கொண்டவர்களாயிருந்ததினால் அவர்களுடைய சிற்பமும் சமயத்தை ஒட்டியே வளர்ந்திருக்கின்றது. பொதுவாக சமய நிலையமாகிய கோயிலை ஒட்டியே சிற்பக்கலை வளர்ந்து வந்திருக்கின்றது. தமிழர்களுடைய இலக்கியம் நற்கலைகள், அன்றாட வாழ்க்கை, வாணிபமும் கைத்தொழிலும் உட்பட எல்லாம் சமயப் பொலிவு கொண்டவைகளாவே இருக்கும். சிற்சில சமயங்களில் சமயப் பற்றற்ற வடிவங்களைக் கண்டபோதிலும் பெரும்பான்மையாள சின்னங்களெல்லாம் சமயத்தை ஒட்டியே இருக்கக் காண்போம். அதிலும் கோயிலைச் சுற்றியே சின்னங்கள் விளங்கிக் கொண்டிருக்கின்றன.

ஒரு எடுத்துக் காட்டைக் கூறுவோம். கோவைக்கு மூன்று கல் தொலைவிலிருக்கும் திருப்பேரூர் கோயிலுக்குச் சென்று பார்ப்போம். அவ்வழகிய ஊரை அணுகும் போதே நம் எதிரில் தோன்றுவது உயர்ந்த அழகிய கோபுரமாகும். அதைக்கடந்து சென்றால் இறைவன் எழுந்தருளியிருக்கும் விமானத்தைக் காண்போம். கோபுரமென்பது கோயிலின் தலைவாயிலின்மேல் கட்டப்பட்டிருக்கும் அரிய சிகரமாகும். அதனை மூலஸ்தானத்தின் மேலிருக்கும் விமானத்துடன் மயங்கலாகாது. கோபுரமென்றால் கோ அல்லது பசு, புகும்வாயில் என்பது. பண்டைக் காலத்தில் ஒவ்வொரு ஊருக்கும் அரண், அல்லது காப்புமதில் இருந்தது. அதற்கு ஒருவாயில் உண்டு. அது இரவில் மூடப்படும், பகலில் திறக்கப்படும். விடிந்ததும் பசுக்கள் நிலங்களுக்குச் செல்வது அந்த வாயில் வழிதான். மாலையில் புலன்களிலிருந்து திரும்பிவருவதும் அந்த வாயில் வழிதான். ஆகவே அதற்குக் கோபுரம் என்று பெயர் தரப்பட்டது. ஊரை ஒத்தே கோயில் கட்டப்பட்டதினால் அதன் வாயிலுக்கும் கோபுரம் என்ற பெயர் தரப்பட்டது. நாளாவட்டத்தில் அக்கோபுர வாயிலுக்கு சிற்பக் கண் கொண்டு அழகாக சிகரம் அமைத்தார்கள்.

இனி விமானம் என்ற சொல் மூலத்தானத்தின் பேரில் கட்டப்பட்ட சிகரத்திற்கு இடப்பட்டதின் காரணம் என்னவெனின் அச்சொல்லே அதனை அறிவிக்கும். விமானம்



என்ற சொல் நன்றாக அளக்கப்பட்டது என்ற பொருள் கொண்டது. இறைவன் எழுந்தருளியிருக்கும் இடம் நன்றாகயிருக்கவேண்டாமா? நாம் வசிக்கும் வீட்டைத் தூய்மையாக வைத்திருப்போம். அதைப்போலவே இறைவன் வசிக்கும் நிலையமும் தூய்மையாக இருக்க வேண்டும். தூய்மை மட்டுமல்ல எல்லாச் சிறப்புகளையும் கொண்டிருக்க வேண்டும். வீட்டைச்சுற்றிச் சுவர் எழுப்புகிறோம். அதுபோலவே, கோயிலைச் சுற்றி மதில் எழுப்பப்படும். வீட்டிலே அருமையான பொருள்களைச் சேகரித்து வைப்போம். கோயிலிலும் அருமையும், அவசியமும் கொண்ட பொருள்கள் இருக்கவேண்டாமா? ஆகவே கோயிலில் வழிபாட்டுப் பொருள்கள் சடங்குப் பொருள்கள் முதலியவைகள் வைக்கப்பட்டன. எதையும் அழகு செய்வதென்பது மனிதனுடைய இயல்பு. ஆகவே கோயிற் பொருள்கள் அழகு செய்யப்பட்டன. உருவங்கள் அழகாக நிறுவப்பட்டன. தூண்கள், சுவர்கள், விட்டங்கள், முகடுகள், இவைகளெல்லாம் சித்திரிக்கப் பெற்றன. மேலும் கோயில்களிலே ஆடல்பாடல் வழிபாட்டோடு சேர்க்கப்பட்டன, வணக்கம் செய்வதற்காக நந்தவனங்களும், நீராடுவதற்காகத் தடாகங்களும் தோன்றின. இந்தவகையில் கோயில் நற்கலைகளுக்கு நடுநாயகமாக ஏற்பட்டது.

சென்ற 20-நூற்றாண்டுகளில் முன்னிருந்து வளர்ந்த தென்னிந்திய சிற்பக் கலையின் வரலாற்றை ஆராயுங்கால் அது மிக எளிய தன்மையிலிருந்து வெகு முதிர்ச்சியடைந்த நிலைமை மட்டும் வளர்ந்து வந்திருப்பதை அறியலாம். ஒரு பெரிய மரத்தின் நிழலில் ஒரு மேடையின்மீது வைக்கப்பட்ட உருவக் கோயிலிலிருந்து எழுபெரும் மதில்களைக் கொண்ட பெரும் நகரம் என எண்ணத்தக்க பெரிய ஆலயம் மட்டும் வளர்ந்து வந்திருக்கின்றது. மனிதனுக்குக் குடியிருக்க காற்று, மழை, வெய்யில், இம்மூன்றிற்கும் வரவொட்டா ஒதுக்கிடம்வேண்டும் அதுபோலவே அவன் வணங்கும் இறைவனுக்கும் வேண்டாமா? மனிதனுடைய நாகரிகம் படிப்படியாக ஏற அவனுடைய குடியிருப்பும் ஏறிக் கொண்டு போகும். அதுபோலவே இறைவன் இருக்கும் கோயிலும், மரத்தின் நிழலாக இருந்த சிறு கோயில் ஓலைக்

கூரையாகி பிறகு வில்லைக்கூடமாகி, பின்னர் கல்மண்டபம்
ஆயிற்று. முன்னர் மண் சுவராக இருந்தது, பிறகு செங்
கற் சுவராகி, இறுதியில் கருங்கற் சுவராயிற்று. சங்க
கால முதலாகப் பல்லவர் காலத்து இடைநிலை மட்டும் மண்
தளிகளாகவே கோயில்கள் இருந்தன. ஆறு, ஏழு நூற்
றாண்டுகளில் பல்லவ அரசர்கள் சிற்பக்கலை வளர்ச்சியில்
ஈடுபட்டார்கள். மகேந்திரவர்மன் மலைகளைக் குடைந்து,
மண்டபங்கள் ஆக்கினான். பிறகு தனிப் பாறைகளை ரதங்
களாகச் செதுக்கினான். பிறகு வெட்டின கற்களை ஒன்றின்
மேல் ஒன்றாக அடுக்கி விமானக் கோயில் உண்டாக்கினான்.
இம்மூவகை நிலைகளையும் மாமல்லபுரத்தில் இன்றும்
காணலாம். ஆறாம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்
றாண்டுவரை பல்லவர்களின் சிற்பவளர்ச்சி தொண்டை
நாடு முழுவதிலும் சான்றுகளைக் கொண்டு தோற்றுவிக்
கின்றது.

தமிழர் பண்பாட்டின் உச்சநிலை சோழர் பேரரசிலே
காண்கின்றோம். அது பத்தாம் நூற்றாண்டுமுதல், பதின்
மூன்றாம் நூற்றாண்டுவரை திரைகடல் கடந்து பரவியது.
பல்லவர்கள் வளர்த்தின சிற்பக்கலையைச் சோழர்கள் பெரி
தாக்கினார்கள். கோயில் விமானப்பணி வான் அளாவி
ஓங்கியது. தன் இராஜ இராஜேச்சுரமும், கங்கை
கொண்ட சோளேச்சரமும் ஆலய சிற்பத்தின் உச்சியைக்
காட்டுகின்றன. பதினான்காம் நூற்றாண்டு முதல் விஜய
நகரத்துக் கர்னாடகர்கள் தென்னாட்டை ஆண்டார்கள்.
அவர்களுடைய சிற்பக்கலை பெரியது என்ற முறையில்
சென்றது. உயர்ந்த கோபுரங்கள், கோட்டைபோன்ற
மதிற்சுவர்கள், அகன்ற மண்டபங்கள், நிறைந்த தடாகங்
கள் இவைகள் கோயிலைச் சுற்றி எழும்பின. 16-கால்
மண்டபங்கள், 64, 108, 1008, கால்களோடு அமைந்தன.
சிதம்பரம், திருவண்ணாமலை, திருவானைக்காவல், காஞ்சி
முதலிய பூத ஸ்தலங்கள் 1008-கால் கொண்ட மண்டபங்க
ளோடு விளங்கின. அவர்கள் காலத்தில் விமானத்தைக்
காட்டிலும், கோபுரமே, ஓங்கி நின்றது. ஒற்றைமதில்,
3, 5, 7, மதில்களைக் கொள்ளத் தொடங்கின. 16-ம் நூற்
றாண்டு முதல் விஜய நகரத்து சாமந்தர்களான, நாயக
மன்னர்கள் தென்னாடு முழுவதிலும் சிற்பக்கலைகளை



வளர்த்தினார்கள். மண்டபங்களிலே கல் தூண்களைத்
திருவுருவங்களால் அழகுபடுத்தியும், சுவர்களில் மலர்
களையும் உயிரோவியங்களையும் செதுக்கியும், தள
வரிசைகளில் தாமரைகள், கற்சங்கிலிகள் தொங்க
விட்டும் கலையைப் பெருக்கினார்கள். இவ்வகையில்
ஏற்பட்ட சிற்பக் கலையைத் திருப்பேரூரில் கனகசபையில்
காணலாம். நடராஜப் பெருமானின் திரு முன்னிலையில்
அமைந்திருக்கும் 12 தூண்களிலும் சிவமூர்த்தங்களின்
சிற்பவேலைத்திறம் எவரையும் வியக்கச் செய்யும். அவ்வுரு
வங்களில் உள்ள நுண்ணிய வேலை வேறிடங்களில்
காண்பதரிது. அம்மண்டபத்தில் மேல்தளத்தில் தொங்
கும் கணக்கற்ற இதழ்களைக்கொண்ட தாமரையும் அதன்
மையத்தில் உள்ள மலர் மொட்டின் சுற்றி ஆடக்கூடிய
கல்வலையமும் நாற்புறங்களிலும் தொங்கும் நீண்ட கற்
சங்கிலிகளும் எவரையும் பிரமிக்கச் செய்யும்.
இத்தனை சிறப்புக்கொண்ட வேலையாட்கள் எங்கே மறைந்
தார்கள் என்று நாம் கேட்கவேண்டும். பேரூருக்குப்
போகும் பொதுமக்கள் கண்களில் இச்சிறப்புக்கள் படுவதே
இல்லை. மேலும் பாறையில் செதுக்கப்பெற்ற தொடர்ச்சிக்
கதைச் சிற்பத்திற்கும் குறைவில்லை. மாமல்லையில் காணும்
அர்ச்சுனன் தபசு என்ற ஓவியச்சிற்பமும், மதுரை மதன
கோபாலசுவாமி கோயில் மண்டபத்திலுள்ள இராமா
யணத் தொடர்ச்சிச் சிற்பமும் தென்னாட்டுக் கலையை
விளக்குகின்றன.

காலம் செல்லச்செல்லக் கோயில் சிற்பத்திற்குத் தத்து
வக்குறைவு கூறப்பட்டது. சைவ ஆகமங்களும், திருமந்திர
மும், இக்கொள்கையை எடுத்தாளுகின்றன. மனிதன்
ஆன்மா, வசிக்கும் ஓர் உடலைப் படைத்திருக்கிறான்.
அதுபோல கோயிலும் இறைவன் அமரும் இருக்கையாகும்.
மனிதனுக்கு ஒரு ஸ்தூல உடல்போல் இறைவனுக்கு ஒரு
கர்ப்பக்கிரகம் உண்டு. மனிதனுக்கு ஸ்தூல,
சூக்ஷம, காரண உடல்களைப்போல கோயிலிலும் மும்மதில்
கொண்ட மூன்று பிராகாரங்கள் உண்டு. இனி மனித
னுக்கு அன்னமயகோசம், பிராணமயகோசம், விஞ்ஞான
மயகோசம், ஆனந்தமயகோசம் என்ற 5 கோசங்களில்
இருப்பதைப்போல இறைவனுக்கும் 5 மதில்கள் சூழ்ந்த

பிராகாரங்கள் உண்டு. இதனைத் திருவானைக்கா, திருவண்ணாமலை முதலிய பூதஸ்தலங்களில் காணலாம். இனி மனிதனுக்கு ஏழு சரீரங்கள் உண்டென்பர். அதையொத்து, திருவரங்கத்தில் ஏழு பிராகாரங்களைக் காண்கிறோம். தத்துவார்த்த முதிர்ச்சி ஆலய அமைப்பில் காட்டப்படுகின்றது. இது தமிழ் மக்களின் முதிர்ந்த பேரறிவைத்தோற்றுவிக்கின்றது. இவ்வகையான உயர்ந்த சிற்பக்கலை வளர்ச்சி வேறு எந்த நாட்டிலாவது உண்டா? ஆராயுங்கள்.

---

## விரிவுரைப் பகுதி

# திருவாசகச் சிறப்பு

[புலவர். முருகவேள், பி.ஓ.எல்.]

"திருவாசகத்தை ஓதியும் உருகாத ஓருயிர் இருக்குமாயின் அதனைக் கல்லென்று கழறுதுமோ, அன்றி மண்ணென்று வகுக்குதுமோ, இரும்பென்று இயம்புதுமோ? சொன்மின்கள்!"

—பேராசிரியர். மறைமலையடிகள்

### முன்னுரை

அமிழ்தினும் இனிய நமது அருமைத் தமிழ் மொழியின்கண் உள்ள அரும்பெறற் சிறப்பு நூல்கள் பலவற்றுள் திருவாசகமும் ஒன்றாய்த் தலைசிறந்து முதன்மை மிக்குத் திகழ்வதாகும். இத்தென்றமிழ் நாடெங்கணும் உள்ள சைவத் தமிழ் நன்மக்கள் அனைவரும் திருவாசகத்தினைத் தம் உயிரினும் இனிய விழுமிய தெய்வத் திருநூலாகப் பெரிதும் மதித்துப் பேரன்புடன் ஓதிப் போற்றி வருகின்றனர். சிறப்பாகத் தமிழகத்தின்கண் உள்ள சைவப் பெருமக்கள் எல்லோர்க்கும், ஒப்புயர்வற்ற மிகமேலான முதற்பெரு மறைநூலாகத் திருவாசகம் விளங்கி வருகின்றது. தமிழ் கூறும் நல்லுலகம், திருவாசகத்தினை இலக்கியம் மொழி கவிதை சமயம் ஞானம் அநுபவம் அருள் முதலிய பல துறைகளிலும் மிகப் பெருஞ் சிறப்பு வாய்ந்ததொன்றாகக் கொண்டு பாராட்டி மகிழ்ந்தின்புறுகின்றது.



### திருவாசகம் என்பதன் பொருள்

திருவாசகத்தின் சிறப்பினை யெல்லாம் அதன் பெயர் தானே ஒருவாறு குறிப்பிற் புலப்படுத்த வல்லதாய் உள்ளது. வாசகம் என்பது சொல், மொழி, நூல் எனப் பொருள்படும். திரு என்பது அழகு, தெய்வத்தன்மை, செல்வம், வீடுபேறு, சிவம் முதலிய பலபொருள்களைக்குறிக்கும். எனவே, திருவாசகம் என்பதற்கு, இறைவனது பொருள்சேர் புகழ்கூறும் பேரழகுடைய நூல் – தெய்வத் தன்மை மிக்க சிறந்த நூல் – ஞானப் பெருஞ் செல்வமாய நூல் - வீடுபேறு அளிக்கும் அருண்மொழி நூல் – சிவத்தைப் பற்றியநூல் - சிவமாந்தன்மைப் பெருவாழ்வு பெற்றார் செய்த நூல் - தன்னை ஓதுவோரைச் சிவமாகச் செய்யவல்ல நூல் எனப் பலவகையிற் பொருள் கொள்ளலாம். இப்பலதிறச் சிறப்புகளும் திருவாசகத்தின்கண் பெரிதும் பொருந்திப் பொலிந்து மிளிர்கின்றன என்பது உண்மை. வெறும் புகழ்ச்சியில்லை! இச்சிறிய கட்டுரையில் திருவாசகத்தின் சிறப்பினை இயன்ற பெற்றி ஆராய்வோம்.

### திருவாசகம் ஒரு சிறந்த கவிதைநூல்

எண்ணிறந்த உலகியலின்பங்களை யெல்லாம் பொறியின்பம் கலையின்பம் என இரண்டாகப் பிரிக்கலாம். பொறியின்பங்களைவிடக் கலை இன்பமே உயர்ந்ததாய் நிலையானதாய் மேன்மேலும் நலம் பயப்பதாய் விளங்குவதாகும். அக்கலையின்பம் மிகப் பல வகைப்படும். அவ்வெல்லாவற்றினும் தலைசிறந்தது கவிதைக் கலை இன்பமேயாகும். இசை சிற்பம் ஓவியம் நடனம் நாடகம் முதலிய மற்றெல்லாக் கலைகளின் இன்பத்தையும் விட நிலைபேறுடையதும், எளிதிற் கிடைப்பதும், எவரும் பெற்று நுகரக் கூடியதும், அடிப்படையாய் அமைவதும் கவிதை இன்பமேயாம். உள்ளம் உருகப் பாடும் இசைப் புலவனின் இசையும், கண்களிக்கக் காட்டும் சிற்பியின் ஓவியமும், கண்ணும் செவியும் மகிழ நடிக்கும் பொருநனின் கூத்தும் பிறவும், நல்லிசைப் புலவன் ஒருவனது செய்யுளைப்போல் நமக்கு எக்காலத்தும் எவ்விடத்தும் நிலைபெற்ற இன்பத்தை விளைவிக்க மாட்டா. ஏனைக் கலைஞர்கள் விளைக்கும் இன்பங்களெல்லாம் ஐம்புல நுகர்ச்சியாய சிற்றின்பங்களாய் விரைவில் அழிந்தொழிய,

நலஞ்சிறந்த ஒரு கவிஞன் விளைக்கும் இன்பமோ உணர்வை
யும் உள்ளத்தையும் கவர்ந்து நிலைபெற்று நின்று அறிவும்
இன்பமும் நல்கி உயிர்க்குப் பேரின்பம் உண்டாக்கும்.
இவ்வாற்றால் இணையின்றிச் சிறந்திலங்கும் கவிதை இன்பத்
துறையில் வைத்துச் சீர்தூக்கிப் பார்க்கலுறின், திருவாச
கத்தின் பெருமை அளவிடற்கரியதாக உளது! திருவாசகக்
கவிதைகளைப் பொருளுணர்ந்து நெஞ்சம் நெக்குருகி அன்
போடு இசைநலமும் கெழுமத் தக்கோர்கள் பாடக்
கேட்குங்கால், விளையும் இன்பத்தினை என்னென்பது?

" வள்ளுவர்நூல் அன்பர்திரு வாசகம்தொல் காப்பியமே
தெள்ளுபரி மேலழகன் செய்தவுரை—ஒள்ளியசீர்த்
தொண்டர் புராணம் தொகுசித்தி ஓராறும்
தண்டமிழின் மேலாந் தரம் "

" தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும்—கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர் "

எனவரும் பாடல்களால் தமிழ் மொழியிலுள்ள தலைசிறந்த
ஒப்புயர்வற்ற பெருங்கவிதை நூல்களுள் திருவாசகமும்
ஒன்றாதல் உணர்க!

## கற்றாரும் கல்லாரும் காதலிக்கும் நூல்

இனி, கவிதைகளை இருவகையாகப் பிரிக்கலாம். ஒரு
வகை, கற்றுயர்ந்த பேரறிஞர்கள் மட்டுமே சுவைத்துக்
களிக்கத் தகுவது. பிறிதொரு வகை, கல்வியறிவில்லாதவர்
களால் மட்டுமே விரும்பிப் போற்றப்படுவது. இவ்விரண்
டனுள் ஒன்றாக மட்டும் அமையும் கவிதைநூல் எதுவும்
அத்துணைச் சிறந்ததாகாது. கற்றார் கல்லார் என்னும் இரு
திற மக்களும் விரும்பிப் போற்றத் திகழும் நூலே மிகவும்
சிறந்ததொன்றாகும். மிகச் சிறந்த பெருங் கவிஞராகிய
'செகப்பிரியர்' கற்றோர்கள் படித்துச் சுவைத்து இன்புறத்
தகும் அரிய உயர்ந்த கவிதைப் பகுதிகளும், கல்லாதார்
கண்டு மகிழத்தக்க பலவகையவாய எளிய நகைவேழம்பப்
பகுதிகளும் ஒருங்கமையத் தமது நாடகங்களை இயற்றி



யுள்ளமை காணலாம். அதற்கேற்ப, பேரறிஞர்கள்
சுவைத்துவக்கத் தகுந்த இறையருளின்ப அனுபவ நலச்
செய்திகளையும், கல்லாதார் உளங்களைக் கவர்ந்து அவர்கள்
கேட்டு மகிழ்தற்குரிய பலதிறப் புராண கதைகளையும்,
மகளிர் விளையாட்டுப் பாடல்களில் வைத்துத் திரிசொற்
களும் கொச்சைச் சொற்களும் மறைபொருட் குழூஉக்குறிச்
சொற்களும் விரவாமல், நாட்டுப் பாடல்கள்போல் எளிய
இனிய தெளிவான செவ்விய சிறந்த நடையில் கலந்தினிது
நலந்தோன்ற அளவாக இயைத்துச் சிறந்துயர்ந்த செந்
தமிழ்க் கவிதைகளாக்கித் திருவாசகமாகத் தந்தருளிய
மாணிக்கவாசகரின் புலமை மாட்சிமை சாலப் பெரிய
தாகும். [1]" பெரும்பாலான கல்லாப் பொதுமக்களை மகிழ்
வுறுத்தும் நோக்கத்தின் பொருட்டே, எளிய இனிய
கவிதையழகுகளாகப் புராண கதைகளும் கற்பனைகளும்
திருவாசகத்துள் இடையிடையே இணைத்துத் தொடுக்கப்
படுகின்றன " எனப் போப் ஐயர் அவர்கள் கூறுதல் ஈண்
டுக் கருதற்பாலது. இங்ஙனம், கல்லாப் பொதுமக்களுக்
கெல்லாமும் இறைவனது அருட்பெருந் திறங்களை விளக்
கும் முறையில், திருவாசகத்தின்கண் இடையிடையே
போதரும் பல அருள் நிகழ்ச்சிகளும் மெய்வரலாறுகளும்
புராணகதைகளும் பற்றிய குறிப்புக்கள் தாமும், திரு
வாசகத்திற்கு ஒருவகை யழகும் சுவையும் நல்கி அதன்
சிறப்பினைப் பெரிதும் மிகுதிப்படுத்துகின்றன!

## திருவாசக நூற் சிறப்பு

[2]கார்லைல் என்னும் ஆங்கில அறிஞர், [3]" இயற்கைக்
குரல்கள் " என்றும், [4]" வெறும் செயற்கை எதிரொலிகள் "
என்றும் நூல்களை இருதிறனாகப் பிரித்துச் சிறந்த பேரிலக்
கியங்கள் எல்லாம் இயற்கைக் குரல்களாம் என்றும்,
ஏனைப் புல்லிய போலி நூற்களெல்லம் வெறும் செயற்கை
எதிரொலிகளாம் என்றும் இனிதியம்பினார். தொல்காப்

---

1" Pauranic mythology and legand is dragged in, as simple poetic embellishment designed to please the multitude." —Dr. G.U.Pope.

2Carlyle. 3Genuine voices. 4Mere Echoes.

பியரும் இக்கருத்துப்பட முதல்நூல், வழிநூல் என்பர்! அம்முறையாற் கருதுகின்றுழி, இறையருளின்ப அனுபவநல உணர்ச்சிகளை உள்ளவாறு இயல்பாக இனிதெடுத்துப் பாடி நம்மனோர்க்கு அளப்பரும் நலம்பல விளைக்கும் திருவாசகமானது இயற்கைக் குரல் நூல் வகையினையே சேர்ந்த சிறந்ததொரு பேரிலக்கிய முதல்நூலாதல் காணலாம்.

“கண்டவர் விண்டிலர் விண்டவர் கண்டிலர்” என்பது பொருள் பொதிந்த ஒரு சிறந்த தமிழ்ப்பழமொழி. தாயுமானார் இதனைத் தம் பாடல்களிற் குறிப்பிட்டுள்ளார். இறையருளனுபவத்தின் பெருமையையும் அருமையையும் இப்பழமொழி இனிதெடுத்து விளக்குகின்றது. ஆயின், இஞ்ஞான்று ஒருசிலர் இதனை இறையுண்மை மறுக்கும் கருத்துடன் எடுத்தாண்டு வழங்கி வருகின்றனர்! அஃதெங்ஙனமாயினும், “கண்டவர் விண்டனர், விண்டவர் கண்டனர்” எனவும் மாற்றிக் கூறி நம்மனோர் பெருமிதங் கொள்ளுதற்குத் திருவாசகம் துணைசெய்கின்றது! “கண்ணால் யானும் கண்டேன் காண்க!” எனவும், “காட்டினாய் கழுக்குன்றிலே” எனவும், பிறவாறும் மணிவாசகர் திருவாசகத்துள் கூறியருளுதல் காண்க! வேறு பிறநூல்கள் செய்யாத செயற்கருஞ் செய்கையைத் திருவாசகம் முதன்முதற் செய்து காட்டியுளது!

ஈதொன்றோ! “வீடு என்பது சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்தாகலின், துறவறமாகிய காரணவகையாற் கூறப்படுவதல்லது இலக்கணவகையாற் கூறப்படாமையின், நூல்களாற் கூறப்படுவன ஏனைய மூன்றுமேயாம்” எனக் கூறிய ஆசிரியர் பரிமேலழகர் போலாது, அவரின் வேறுபட்டு ஆசிரியர் நச்சினார்க்கினியர் தொல்காப்பியப் பாயிரத்துள், “அகத்தியனாரும் தொல்காப்பியனாரும் வீடுபேற்றிற்கு நிமித்தம் கூறுதலன்றி வீட்டின் தன்மை தமிழாற் கூறார் என்று உணர்க; இதனை “அந்நிலை மருங்கின் அறமுதலாகிய, மும்முதற் பொருட்கும் உரிய என்ப” என்பதனான் உணர்க; இக்கருத்தானே வள்ளுவநாயனாரும் முப்பாலாகக் கூறி, மெய்யுணர்தலான் வீடுபேற்றிற்கு நிமித்தம் கூறினார்” என்றார். ஈண்டு, ஆசிரியர் நச்சினார்க்கினியர் ‘வீட்டின் தன்மை தமிழாற் கூறார்’ என நவின்ற தொன்றுமேயாம் கருதுதற்குரியது. நச்சினார்க்கினியரினும் மிக்க தமிழ்ப்



பற்றும் தமிழறிவும் நாம் உடையோமல்லோம். ஆதலின் நச்சினார்க்கினியர் பெருந்தகையினை எவ்வகையிலும் குற்றங் கூறக் கருதி இத்தொடர் எடுத்துக் காட்டப் பெறுகின்றிலது. அஃதெங்ஙனமாயினும், ஈண்டு நாம் வற்புறுத்த விரும்புவது இவற்றின் அறவே வேறுபட்ட கருத்தாம். வீட்டின் தன்மையைத் தமிழாற் கூறமுடியும் — தமிழ் ஒன்றனாலேயே கூறமுடியும் — தமிழ்மொழியினைத் தவிர வீட்டின்பமாய இறையருளனுபவ இன்பநலங்களின் பெற்றியினை விரித்துரைத்து விளக்கும் மொழி உலகில் வேறு பிறிதெதுவும் இல்லை எனத் தமிழராய நம்மனோர் செம்மாந்து சிம்புளித்துப் பெருமிதங் கொண்டின்புறுதற்கு ஒரு சிறந்த பெருங்கருவியாகத் திகழ்வது திருவாசகமேயாம். [5]“சட்டத்திற்கு இலத்தீன் மொழியும், நீதிபோதனைக்கு ஈபுருமொழியும், மெய்ப்பொருளறிவிற்கு வடமொழியும், அறிவியற்கலைக்கு ஆங்கிலம் பிரெஞ்சு செருமானிய மொழிகளும் போல, இறையருளின்ப அனுபவக்கவிதைகளுக்குத் தமிழ்மொழியானது சிறந்து விளங்குகின்றது” எனக் கூறி மகிழத் துணைசெய்யும் நூல்களுள் திருவாசகம் தலைசிறந்ததாகும் என்பதில் தடையில்லை.

## சான்றோர்கள் பாராட்டும் தனிப்பெரு நூல்

திருவாசகம் தோன்றிய நாள் தொட்டு அதனைப் போற்றாத சான்றோர் பெருமக்கள் இல்லை! [6]“பொருள்

---

5“ If Latin is the language of Law, Hebrew the language of Ethical religion, Sanskrit the language of Philosophy, English French and German the languages of Science, Tamil is the language of the Poetry of Divine Experience.”

—Prof. T. P. M.

6“ There are, indeed, but few poems in any language that can surpass Thiruvasakam or ‘the holy word’ of Manickavasagar, in profundity of thought, in earnestness of feeling or in the childlike trust, in which the struggling human soul, with its burdens of intellectual and moral puzzles, finally finds shelter.”–Prof. P. Sundaram Pillai, M.A.

பொதிந்த கருத்துக்களிலும், மனவுணர்ச்சிகளை வெளியிடும் இயல்புண்மைத் திறனிலும், அயரா அன்பு கெழுமிய கள்ளமற்ற குழவி யுள்ளத்திலும், திருவாசகத்திலும் சிறந்த பிறிதொரு நூல் உலகில் வேறெம்மொழியிலும் இல்லை. அறிவாராய்ச்சிக் குழப்பங்களும், ஒழுக்க இழுக்கக் குறைநிறைகளுமாகிய சுமைகள் இடைவிடா தழுத்தித் துயர் செய்தலால் தடுமாறி நிற்கும் உயிர்கள், கடைசியாகத் தாம் துன்பம் நீங்கி இன்பம் ஓங்க அடையத்தகும் அரணாக அது திகழ்கின்றது!'' எனப் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள் தாம் இயற்றிய 'திருஞானசம்பந்தர் காலம்' என்னும் நூலில் திருவாசகத்தினை மிக வியந்து பாராட்டுகின்றார்!

[7]'' திருவாசகமானது அழகிய இனிய பாடல்களில் அறியாமை பேரவா முதலிய அடிமைத் தளைகளினின்று விடுபட்டு, அன்பு அறிவு என்பனவற்றின் உரிமைபெற்று, முறை முறையே வளர்ந்து செல்லும் உயிரின் முன்னேற்றப் படிநிலைகளை நன்கினிது விளங்கக் காட்டுகின்றது. உயிரின்கண் முதன்முதலாக உணர்வுக்கண்கள் திறக்கப் பெறுதல், அதனாற் பிறக்கும் உவகை, பெருமிதம், பலவகை மனநிலை அலைவுகள், கையறவு, உலகியலில் நின்று தடுமாறும் போராட்டம், அமைதியின்மை, இறுதியாக இறைவனை அடைந்து எய்தும் அமைதி, அவனொடு இரண்டறக் கலந்து நிற்கும் பெருமகிழ்ச்சி யுணர்வு என்னும் பலதிற உணர்ச்சிகளும் அதன்கண் பளிங்கென விளங்குகின்றன'' எனத் திருவாசகத்தினைப் போப் ஐயர் அவர்கள் புகழ்ந்துரைத்துப் பாராட்டுவதனை உலகப் புகழ்பெற்ற பேரறிஞர் இராதாக்கிருட்டினன் அவர்கள் தமது ''இந்திய வேதாந்தம்'' என்னும் நூலில் மேற்கோளாக எடுத்துப் போற்றியிருக்கின்றார்.

---

7 Thiruvasakam depicts in beautiful hymns the progress of the soul, from the bondage of ignorance and passion into the liberty of light and love, its first awakening, its joy and exaltation, waywardness and despondency, struggle and unrest, the peace and the joy of union.

—Dr. G. U. Pope.



இங்ஙனமே இராமலிங்க அடிகள், துறைமங்கலம் சிவப்பிரகாசர், குமரகுருபரர், சிவஞான முனிவர், தாயுமானவர், பட்டினத்தார், கல்லாடர் முதலிய எண்ணிறந்த பல பெருஞ்சான்றோர்கள் திருவாசகத்தினைத் தம் உயிரினும் இனிய விழுமிய நூலாக வழிவழியே போற்றிவந்திருக்கின்றனர். [8]தமிழிலக்கியங்களுள்ளே தலைசிறந்ததாய், இறையருளின்ப அனுபவ நலத்தின் மிகச்சிறந்த—மிக உயர்ந்த—வெளிப்பாடாய், அரும் பெறற் கவிதை அமிழ்த இன்ப நூலாக மிளிரும் இத்தகைய சிறந்த திருவாசகத் தென்றமிழ் மாமறை நூலினை நாம் அனைவரும் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்க ஓதி நலம் பெற்று உய்வோமாக.

---

# பெரு விண்ணப்பம்

**[பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் அருளிச்செய்தது]**

[இது, ஸ்ரீ பாம்பன் சுவாமிகள் 1925-ல் வெளியிட்டருளிய ஸ்ரீமத்-குமாரசுவாமியம் என்னும் பெருநூலின் 5-ம் காண்டமாகிய பலதிறப் பொருட் காண்டம் என்னும் பகுதியில் 7-ம் பிரிவாக அமைந்துள்ளது. சுமார் 80 ஆண்டுகள் சீவந்தராயிருந்து 1929-ல் முருகன் திருவடி நீழலெய்திய இச் சுவாமிகள் சிறந்த தபோதனர். இயற்கை மதிநுட்பமும் தமிழ்மொழி வடமொழிப் பெரும்புலமையும் படைத்தவர். தம் வழிபடு கடவுளாகிய முருகப் பெருமானிடம் உபதேசம்பெற்று, அவனைக் கனவிலும் நனவிலும் தரிசித்த மாட்சிமை யுடையவர். எதையும் நுணுகியாராய்ந்து, தாம் மெய்யெனக் கண்டதை அஞ்சாதுரைப்பவர்; பொய்யைப் பெரிதும் வெறுப்பவர். செய்யுள் வடிவிலும் உரைநடை வடிவிலும் முருகன் பெருமையை விளக்கும் பல சாத்திரங்களும் தோத்திரங்களும் அருளிச்செய்த அனுபவஞானி. இக்கால இந்து சமுதாயம் சீர்குலைந்திருப்பதன் அடிப்படைக் காரணம், அதன் சமயக் கருத்துக்களிலும் வாழ்க்கை முறைகளிலும், பிற்காலத்தில் பல மாசுகள் படிந்தமை என்பதை உன்னி, தமது முதிர்ந்த வயதில் அவர் அருளிச்செய்த

---

8'' Thiruvasakam is the masterpiece of Tamil literature. It is the highest and purest expression of human experience of the Divine Grace.''

இப்பதிகத்தில் அக்குறைபாடுகளை அஞ்சாது எடுத்துக் கூறுகின்றார். நம்நாட்டின் சமய வாழ்க்கை பண்டுபோல் தூய்மையும், ஆற்றலும் தெய்விகப் பொலிவும் பொருந்தி விளங்கவேண்டும் என்னும் ஆர்வமுடையார் அனைவரும், இத்தவசிரேஷ்டர் நம் வாழ்வைத் திருத்துங் கருத்துடன் காட்டியுள்ள குறைகளைக் கவனித்து, அவைகளால் இனியும் நம் சமயத்திற்குத் தீங்கு நேராவண்ணம் காப்பதற்கு இப்பாடல்கள் பெரிதும் உதவும். இக் கருத்தையுடைய, முருகன் மெய்யடியவர் திருவெண்ணெய்நல்லூர்—மு. சின்னசாமி செட்டியாரவர்கள் (முருகன் முந்நூல் வெளிவரப் பொருளுதவிய அன்பர்) இப் பெரு விண்ணப்பத்தைப் பலரும் அறிய வெளியிட வேண்டினர். அதற்கிணங்கி, இப் பத்துச்செய்யுட்கள் இங்குத் தரப்படுகின்றன. தனிப் பிரசுரமாகவும் இப்பகுதியை வெளியிட்டு வழங்க செட்டியாரவர்கள் கருதியுள்ளார்கள். —சு. சு.]

மெய்யொ டேபொய்யும் விரவிடு மாறுபன் னூலுள்
கைய ராயவர் பலநுழைத் தார்;அவை கணித்தே
ஐயம் நீக்குத லரிதரி தே! அத னால்இவ்
வையம் நாடுவ ரோஉரி யவர்! அயின் மதனே!

பொய்யில் வேதவி யாசன துரையெனும் புராணத்
தெய்வம் வாழ்தல மீதெனப் பலகதை தெரித்தே
உய்ய லாமெனச் செய்தசு வடிகளுங் உளவால்;
மெய்ய ரிங்குறல் விழைவர் கொலோஅயில் வேந்தே! ௨

தனது நூதனஞ் சிறந்திடற் கோதனைச் சார்ந்தோர்
தினமு நன்குணற் கோசில சுவடிகள் செய்தோன்
அனக சுசுரன் மொழியிவை யென்றதும் அறிந்தேன்;
இனைய பூமியை உறல்நல னேஅயில் இறையே! ௩

எந்த ஆளுடன் எம்மட வரலும்வி ராயே
தந்த மானுடர் உளரெனல் அறிந்தும், எம்சாதி
நந்து மோவெனும் படிறர்கள் சுவடிகள் நம்பும்
இந்த மாநிலம் இனிவிழை யேன்அயி லிறையே! ௪

சாதி யாற்பல திறச்சமர் விளைத்தவி னோடு
ஆதி யாம்பர சிவத்தையும் பலபொரு ளாக்கி
வாதில் நாளொழிக் கின்றவிப் புடவியில் வைகல்
சோதி வேலவ! இனியடி யேனையுந் தொடுமோ! ௫



வரலும் வீவுமில் வரைமகள் நாதனை மலமார்
பிரள யர்கலரென்னவும், அவற்புகழ் பெருமை
சிரலை யோதிடு தமிழ்இழி வென்னவும் இகழ்த்தும்
குரலர் வைகிடல் நறிதுகொ லோ! அயிற் கோவே! ௬

உமையின் நாயகன் உறைதரும் ஓண்டளி யையும்மெய்
அமையு மாறவை பாடிய தமிழரு ளாளர்
தமையும் மாசினுட் படுத்துமற் றென்றுசொல் சழக்குச்
சுமைகொ ளிப்புவி நறிதுகொ லோ! அயில் துரையே! ௭

இழிவினால் நினைப் பற்பல இழிவினுட் படுத்துக்
கழிவு கூறிய சுவடிகள் கண்ணுறல் கருதல்
பழிபல் கூற்றினைக் கேட்டலின் நான்படும் பாடு
மொழியின் வெந்நர காம்உயர் நிலைஅறு முகனே! ௮

பிரண வத்திரு மேனியை யயிற்பெரு மான்! உன்
சரண நம்பெனக் குறுமிடன் எதுஅது தருதி;
மரண மாய்ப்பிறப் புறுமெனின் இப்புவி வழங்கேல்
அரண நாயகனே! பெருந் தருமமிஃ தாமே. ௯

உன்னை யேயனு பவித்தனு பூதிநன் குரைத்தோன்
பொன்னை யாபர மாஇந்தப் புடவியின் ஒழிவே
மன்னர் நேடுசொர்க் கமும்உயர் வீடெனும் வாழ்வும்
என்ன அஞ்சகில் லேன்உனைத் தொழுபதி ஈயே.* ௧௦

*இப்பதிகம், மகாதேஜோ மண்டல சபையார் அநுமதி பெற்று இங்குப் பதிப்பிக்கப்பெற்றது.

---

# சைவப் புலவர் தேர்வு வினாக்கள்-1953

## II சாத்திரப் பகுதி

நேரம் : **3** மணி] [மதிப்பெண் : **100**

I (a) "சிவஞானபோதம்"—பெயர்க்காரணம் கூறுக.
(b) சூரணியின் தொகை என்ன?

அல்லது

பொதுவியல்பிற்கும் சிறப்பியல்பிற்கும் உள்ள பேதம் யாது? 4

II "சங்கார காரணனாயுள்ள முதலையே முதலாகவுடைத்து இவ்வுலகம்" — இம் முதலாயுள்ளவர் யார்?

அல்லது

"யானே உலகென்பன் இன்று"—யார் எச் சமயத்தில் இங்ஙனம் கூறுதல் பொருந்தும்? 2

III ஆணவமல இலக்கணம் கூறுக.

அல்லது

ஆன்மா அடையும் அவத்தைகள் இவை யெனக் குறித்து, இவை எங்ஙனம் நிகழுகின்றன என்று குறிக்க. 4

IV சிவத்திற்கும் சத்திக்குமுள்ள தொடர்பு யாது?

அல்லது

"அசுத்தப் பொருளோடு ஒற்றுமைப்பட்டு நின்ற ஆன்மா சுத்தப் பொருளோடு ஒற்றுமைப்பட்டு நிற்குமாறு எங்ஙனம்"? 6

V (a) சகலான்மாக்களை ஆட்கொள்ள ஞானாசாரியன் எப்போது வருவான்?

அல்லது

முத்திபெற்ற ஆன்மாவை எப்பொருளில் 'சுதந்திரன்', எப்பொருளில் 'பரதந்திரன்' என்னலாம்?

(b) முத்திநிலையில் ஆணவமலம் செய்யும் உபகாரம் யாது? 8

VI (a) சிவஞான சித்தியார் எத்திறமக்கட்கென்று இயற்றப் பெற்றது?

(b) (i) அளவைகள் எத்தனை என்று பிற நூல்கள் கூறும்? (ii) சித்தியார் ஒப்பிக் கூறும் அளவைகளுள் ஒன்றின் பிரிவுகளைக் குறிக்க.

அல்லது

தோல்வித்தானத்தின் வகையும் விரியும் இத்தனை யெனக் குறிக்க.

(c) சித்தியாரின் பரபக்கமும் சுபக்கமும் எவ்வெப் பார்வையினோடு எழுதப்பெற்றவை? 9

VII (a) "எல்லாம் வருவிப்பான் ஒருவன் வேண்டும்"—ஏன்?

(b) தத்துவங்களின் தொகையும் வகையும் குறிக்க.

அல்லது



"சைதன்னி யங்களைந்து, சித்தசித் தான்மா ஒன்று முப்பது மசித்தே செப்பில்"—பொருள் வரைக.

(c) படைப்பிற்கு வேண்டிய காரணங்கள் எவை?

அல்லது

ஆணவத்திற்கும் மாயைக்கும் உள்ள முக்கிய வேற்றுமை யாது? 10

VIII (a) தேவர்கள் முதலிய சீவர்கட்கு வாய்க்கும் வடிவங்கட்கும், இறைவன் கொள்ளும் திருமேனிகட்கும் உள்ள முக்கிய வேறுபாடு யாது? அல்லது இறைவனை "அத்துவா மூர்த்தியாக அறைகுவதென்னை"?

(b) சிவனுக்கும் சீவனுக்குமுள்ள அடிப்படை ஒற்றுமை வேற்றுமை என்ன? அல்லது "குறிபெற்ற சித்தும் சத்தும் கூறுவ துயிருக்கு"—பொருள் விளக்குக.

(c) "இழுக்கிலா அறங்களானால் இரங்குவான் பணியறங்கள்"—இவ்வறங்கள் எவை? 10

IX ஆன்மாக்கள் சித்தாந்த சைவத்தைத் தலைப்படுவதெப்போது? 5

X சரியைக்கும் கிரியைக்கும், அல்லது சமயதீக்ஷைக்கும் விசேஷதீக்ஷைக்கும் உள்ள வித்தியாசம் என்ன? 4

XI "ஞானஞேயமொடு ஞாதிருவும் நாடாவண்ணம், பின் மார்க்கச் சிவனுடனும் பெற்றி ஞானப், பெருமையுடை யோர்சிவனைப் பெறுவர் காணே"—உரை வரைக. அல்லது

சுத்தாத்துவைதத்திற்கும் விசிட்டாத்துவைதத்திற்குமுள்ள வேறுபாட்டை விளக்குக. 6

XII "என்று நினைவார்க்கு வினைகளெலாம் நீங்குந்தானே" —என்ன நினைவார்க்கு?

அல்லது

சிவஞானிகட்குச் சீவகருணை இயல்பாகப் பெருக்கெடுப்பதன் காரணம் யாது? 4

XIII (a) "வித்தினைத்தேடி முளையைக் கைவிட்டவர் பித்தேறி னார்களென் றுந்தீபற, பெறுவதங் கென்கொலோ உந்தீபற."

(b) "காற்றினை மாற்றிக் கருத்தைக் கருத்தினுள் ஆற்றுவ தாற்றலென் றுந்தீபற, அல்லாத தல்லலென் றுந்தீபற."

(c) "முத்தி முதலுக்கே மோகக் கொடிபடர்ந் தத்தி பழுத்ததென் றுந்தீபற, அப்பழ முண்ணாதே யுந்தீபற."

—இரண்டனுக்குப் பொருள் வரைக. 10

XIV (a) 'சாத்திரமும் குருமுகத்தாலே பெற்றாலல்லது பிரயோசனமாகாது.'—எதுபோல?

(b) "சாக்கிரம் துரியமாய் நின்றது :—யாருக்கு?

(c) "அங்கே தலைப்படுங்காண், ஆரேனும் காணா அரன்" எங்கே?

(d) "அஞ்செழுத்துமே அம்மை அப்பர் தமைக்காட்டுதலால்" என்பதற்கேனும், "தம்மிற் சிவலிங்கம் கண்டதனைத் தாம வணங்கி" என்பதற்கேனும் பொருள் கூறுக. 10

XV (a) பக்தியோகச் சிறப்பு, அல்லது சிவரூப இயல்பு இன்னதென்று குறிக்க.

(b) "சுகதுக்க வாதனைகள் கூடாமல் நிற்கும்போதே சர்வமும் தானாக நிற்கின்ற சாமர்த்தியமுடைய பரமேசுவரனை இந்தத் திருஷ்டியாலே காணவொண்ணாதோ?" என்று கேட்ட மாணாக்கனை நோக்கி ஞானாசிரியர் அருளிச் செய்தது யாது? 8

---

## I இலக்கியப் பகுதி

நேரம் : 3 மணி] [மதிப்பெண் : 100

குறிப்பு :—ஒவ்வொரு வினாவிலும் யாதானும் ஓர் உட்பிரிவை நீக்கி விடுக.

1 (a) துறவறத்தினும் இல்லறமே சிறப்புடையது என்பதற்குத் திருக்குறளில் நாம் காணக்கிடக்கும் சான்றுகள் யாவை?

(b) "அருளுடைமை", "தவம்" இவைகளுள் யாதானும் ஓர் அதிகாரத்தில் கூறப்பட்ட கருத்துக்களைத் தொகுத்து வரைக.



(c) கீழ்வரும் உவமைகளுள் எவையேனும் மூன்று எவைகளை விளக்க வந்தன என்பதைக் குறிப்பிட்டு உவமப் பொருத்தத்தினையும் விளக்குக :

1. "வன்பாற்கண் வற்றல் மரம் தளிர்த்தல்"
2. "சமன் செய்து சீர் தூக்கும் கோல்"
3. "பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தல்"
4. "கனி இருப்பக் காய் கவர்தல்"

(d) அன்பின் சிறப்பினை வள்ளுவர் எங்ஙனம் விளக்கியுள்ளார்?

(e) விருந்தோம்பினால் ஏற்படும் இம்மை மறுமைப் பயன்கள் யாவை? 24

II (a) கண்டராதித்தரின் வரலாற்றினைச் சுருக்கி வரைக.

(b) திருநீற்றின் பெருமை திருவிசைப்பாவில் எவ்வெவ்விடத்தில் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது?

அல்லது

"பவனெனும் நாமம் பிடித்துத் திரிந்து பன்னாள் அழைத்தால், இவனெனைப் பன்னாள் அழைப் பொழியான் என்றெதிர்ப் படுமே" என்ற திருநாவுக்கரசரின் திருவாக்கினை வேணாட்டடிகள் எங்ஙனம் விளக்கியுள்ளார்?

(c) சேந்தனார் கூறிய வண்ணம் அணியுடை ஆதிரை நாளில் அம்பலவாணரை வணங்க வந்தவர் யாவர்?

(d) தேவர்கள் தில்லைக் கூத்தனைத் தொழும் முறையினைத் திருவாலியமுதனார் எங்ஙனம் விளக்கியுள்ளார்?

(e) திருவிசைப்பாவில் வந்துள்ள அகப்பொருள் துறை அமைந்த செய்யுட்களில் யாதேனும் ஒரு செய்யுளின் கருத்தினைக் குறிப்பிட்டு, அதில் அமைந்துள்ள அவலச் சுவையினையும் விளக்குக. 20

III (a) "பெருமை சிறுமை அறிந்தெம் பிரான்போல், அருமை எளிமை அறிந்தறி வாரார், ஒருமையுள் ஆமைபோல் உள்ளைந் தடக்கி, இருமையுங் கேட்டிருக் தார்புரை அற்றே"—

இச் செய்யுளுக்குப் பொழிப்புரை தருக. இச் செய்யுளில் வரும் உவமை திருக்குறளில் எங்ஙனம் விளக்கப்பட்டுள்ளது?

(b) பதி, பசு, பாசம் என்ற முப்பொருள் உண்மையைத் திருமூலர் எங்ஙனம் விளக்கியுள்ளார்? 6

IV (a) முருகப்பெருமான் திருச்சீரலைவாய்க்குச் செல்லும் இயல்பினை நக்கீரர் கூறியபடி வருணிக்க.

(b) பழமுதிர்சோலையின் இயற்கைவளத்தினை விளக்குக.

(c) திருமுருகாற்றுப் படையின் துணைகொண்டு, பண்டைத் தமிழ் மக்களின் பழக்கவழக்கங்களைச் சுருக்கி வரைக. 20

V (a) காரைக்காலம்மையார் அற்புதத்திருவந்தாதியில் நமது நெஞ்சுக்கு அறிவுறுத்தும் அறவுரைகள் யாவை?

(b) "யானே தவமுடையேன்" என அம்மையார் கூறியதன் காரணம் யாது?

(c) "அறிவானுந் தானே யறிவிப்பான் தானே அறிவாயறிகின்றான் தானே, அறிகின்ற மெய்ப்பொருளுந் தானே விரிசுடர்பார் ஆகாயம் அப்பொருளுந் தானே யவன்" —

இச்செய்யுளுக்கு விளக்கவுரை தருக.

(d) சிவபெருமான் தனது திருவடியில் சிலம்பு புனைந் திருத்தல் தகும் என்பதற்கு அம்மையார் காட்டும் காரணங்கள் யாவை? 15

VI (a) காரைக்காலம்மையார் புராணத்திலிருந்து நாம் அறியக்கிடக்கும் பண்டைக்காலத் திருமண முறைகளும் விருந்தோம்பல் முறைகளும் யாவை?

(b) "நம்பெரு மாட்டிக்கு அங்கு நாயகன் அருளிச் செய்வான்"—நாயகன் யாவன்? அவன் அருளிச் செய்தவை யாவை?

(c) (i) "மைதழையும் கண்டர்", (ii) "எயிலொரு மூன்றும் முன்னாள் காய்ந்தவர்"—இவைகளில் காணும் கதைக் குறிப்பினைச் சுருக்கி வரைக.

(d) கீழ்வருவனவற்றிற்கு இடம் சுட்டிப் பொருள் விளக்குக :—

1. "யான் உமது அருளால் வாழ்வேன்"
2. "ஆதலாலே பொற்பதம் பணிந்தேன் நீரும் போற்றுதல் செய்மின்." 15

———

## மதிப்புரை

1. **திருவாசகம் சிவபுராணம் பேருரை :** இயற்றியவர் பண்டிதமணி கா. சு. நவநீதகிருஷ்ண பாரதியார். கிடைக்குமிடம்: ஆசிரியர், மாவிட்டபுரம், தெள்ளிப்பழை, யாழ்ப்பாணம்.

திருவாசகத்திற்கு ஏற்கெனவே உரைகள் இருக்கின்றன. புதிதாக எழுதப்பட்டும் வருகின்றன. அவைகளையெல்லாம் பயின்ற ஆசிரியர் உள்ளத்தில் வேறொரு உரை எழுதவேண்டுமென்ற எண்ணம் வேரூன்றியதால் இவ்வுரை எழுதத் தொடங்கியதாகக் குறித்திருக்கின்றார். அது மெய்தான். திருவாசகத்திற்கு எத்தனை உரைகள் எழுதினாலும் புதிய கருத்துக்கள் தோன்றிக் கொண்டேயிருக்கும். ஆகவே புத்துரைகள் வரவேண்டியதுதான். ஆசிரியர் மிகச் சிறந்த படிப்பாளர். இவ்வுரைக்கண் தமது கருத்துக்களைத் தெளிவுபடக் கூறியிருக்கிறார். 'கோகழி' என்ற சொல்லுக்குப் பொருள் கூறும்போது அது திருவாவடுதுறையைத்தான் உணர்த்துகிறது, திருப்பெருந்துறையை அல்ல என்று எடுத்துக் கூறி, அதற்குப் பல காரணங்களையும் வரைந்திருக்கின்றார். ஆனால் இவ்விரண்டு ஊர்களையே அன்றி, தெலுங்கு நாட்டில் கோகழி என்ற பெயராலேயே ஒரு ஸ்தலம் இருப்பதை ஆசிரியர் எடுத்துக் காட்டவில்லை. மேலும், 'தொல்லையிரும் பிறவி' என்ற வெண்பாவில் பாயிரமாக, பாடியவர் இறைவனாகவே இருக்கக்கூடும் என்ற கருத்து வெகு அழகுபெறக் கூறப்பட்டுள்ளது. இதைப்போலவே இந்நூலின்கண் காணப்படும் மற்றக் கருத்துக்களையும் தமிழன்பர்கள் படித்துப் பயன் பெறுவார்களாக. பழைய உரையாசிரியர்களின் உரையைப் பின்பற்றிப் பாட்டின் வினைமுடிபையும் தொகுத்து எழுதியிருக்கின்றார். சில இடங்களில் எழுத்துப்பிழைகள் இருக்கின்றன. அவைகள் மறுபதிப்பில் மறைந்துவிடலாம். அவனருளாலே "அவன் தாள்வணங்கி" என்பதில் வணங்கி என்ற சொல், ஒற்று அளபெடை பெற்று வணங்ங்கி என்றிருக்கவேண்டும். இந்நூலைத் தமிழ் அன்பர்கள் பெற்று மகிழ்வார்களாக.

## செய்தித் திரட்டு

4—10—53. திருச்சி சைவசித்தாந்த சபை : திரு.வி.க பிரிவாற்றுமை பற்றி அனுதாபக் கூட்டம் நடைபெற்றது.

21—10—53. பவானி திருமுறைக் கழகம் : சிவாலயத்தில் திருமறைநூல் நிலையக் கட்டடம் திறந்துவைக்கப்பட்டது.

28—10—53. நெல்லைத் தென்பகுதியில் வடக்கன்குளம் என்ற ஊரில் முதல் இந்துக்கோயில் தோற்றுவிக்கப்பட்டது.

29, 30—10—53. திருவிதாங்கூர் திருநெறித் தொண்டர் குழாம் வெள்ளிவிழா நடத்தப்பட்டது.

30—10—53. சித்தாந்தப் பேராசிரியர் பிரிவு. விவரம் வேறொரு பக்கத்தில் காண்க.

1—11—53. திருப்பேரூர் சாந்தலிங்கசுவாமிகள் கல்லூரிச் சங்கத்தில் சித்தாந்தப் பேராசிரியர் பிரிவாற்றுமை அனுதாபக் கூட்டம் நிகழ்ந்தது.

1—11—53. புரிசை முருகேச முதலியார் அவர்கள் திருப்பூரில் பெருமாள் கோயிலில் நடத்திய இராமாயணச் சொற்பொழிவு பூர்த்திவிழா சிறப்புறக் கொண்டாடப் பெற்றது.

1—11—53. கோவை தேசியப் பெண்கள் பாடசாலையில் தீக்ஷதர் திருநாள். இசையரங்குத் தொடக்கம்.

2—11—53. தருமபுர மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையம், சென்னை. பெரியபுராண விரிவுரைத் தொடக்கம். பேச்சாளர் - கி. இராமலிங்க முதலியார்.

7—11—53,13—11—53. கோவை இரத்தினவிநாயகர் கோயிலில் கந்தர்சஷ்டிச் சொற்பொழிவுகள்.

11—11—53. சென்னைப் பல்கலைக் கழகத்துச் சொற்பொழிவு : கோவை அரசியல் கல்லூரியில் கோவைகிழார் அவர்கள் " தமிழ் நாட்டு இடப்பெயர்கள் " என்பதைப் பற்றிய பேச்சு.

12—11—53. ஆடுதுறை அப்பர் அருள்நெறிக் கழகம் 5-வது ஆண்டுவிழா.



14—11—53 முதல் 19—11—53 வரை திருவண்ணாமலை கார்த்திகை உற்சவச் சொற்பொழிவுகள். 17-ல் சச்சிதானந்தம் பிள்ளையும், 18-ல் சி. எம். ஆர். செட்டியாரும், 19-ல் சித்பவானந்த அடிகளும் தலைமை வகித்தார்கள். துறவிகள் மகாநாட்டு 9-வது ஆண்டுவிழா நடைபெற்றது.

### கார்த்திகைத் திருநாட் சொற்பொழிவு

மன்னார்குடிக் கருகிலுள்ள பாம்பணிநாதர் தேவஸ்தானத்தின் சார்பில் 20—11—53 அன்று கார்த்திகை தீபத்தை முன்னிட்டு நடைபெற்ற கூட்டத்தில் திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமணியம் அவர்கள் " சிவன் அருள் " என்பது பற்றி மூன்று மணி நேரம் பேசினார்கள்.

21—11—53 அன்று மன்னார்குடியிலுள்ள பிரமஞான சங்கத்தின் ஆதரவில் திருவாசகமணியவர்கள், " ஆன்மக் கலை " என்னும் பொருள்பற்றிப் பேசினார்கள்.

25—11—53. சிவக்கவிமணி அவர்களின் பெரிய புராணப் பேருரை நிறைவைப்பற்றிய கூட்டம் நிகழ்ந்தது.

### கந்தர் சஷ்டி விழா, பழனி

8-11-53 முதல் 11-11-53 வரை பழனியாண்டவர் மலைமீது கந்தர் சஷ்டி விழாவை யொட்டி நான்கு சொற்பொழிவுகள் நடைபெற்றன. அவற்றில் முறையே திரு. ஆர். பஞ்சநதம் பிள்ளையவர்கள் " முருகன் பெருமை " பற்றியும், குகஸ்ரீ பு. பா. ரசபதியவர்கள் " கந்தர் கலி வெண்பா " பற்றியும், கவியரசு. கு. நடேச கவுண்டர் அவர்கள் " மாம்பழக் கவிச்சிங்க நாவலர் " பற்றியும், திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமணியம் அவர்கள் " கந்த சஷ்டியின் மகிமை " பற்றியும் சொற்பொழிவாற்றினார்கள்.

பழனி, ஜில்லா முன்சீப், திரு. டி. எஸ். இராமலிங்கம் பிள்ளையவர்கள் தலைமை வகித்தார்கள். ஆலய நிர்வாக அதிகாரி திரு. டி. எச். விவேகானந்தம் அவர்கள் வந்தனோபசாரம் கூறினார்கள்.

12-11-53. ஸ்ரீ சாதுசாமி மடத்தில் திருவாசகமணியவர்கள் " திருவாசகம் " என்னும் பொருள் பற்றியும், 14-11-53 யன்று மீண்டும் பழனிமலைமீது, " குமரகுருபரர் " என்பது பற்றியும் பேசினார்.

தூத்துக்குடி ந. சிவகுருநாத பிள்ளை, அவர்கள் யாழ்ப்
பாணம் சிவபாதசுந்தரம் பிள்ளை, பி. ஏ., அவர்கள்
ஆகிய பெருமக்கள், சமீபத்தில் இறைவனடி எய்தியமை
குறித்து, அவர்தம் அரும்பெரும் குணங்களையும், அப்பெரு
மக்கள் சைவத்திற்கும் தமிழுக்கும் செய்த தொண்டுகளையும்
பாராட்டி, அன்னாரின் ஆன்மா அம்பலவாணன் திருவடி
நீழலில் இன்புற்றிருக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கச்
சமாஜத்தின் சார்பிலும் ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன
சபையின் சார்பிலும் ஷை சபையில் 29—11—53 ஞாயிறு
மாலை 4-மணிக்கு ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது.

சமாஜத் தலைவர் இராவ்சாஹிப் நல். முருகேச முதலி
யார், பி.ஏ. அவர்கள் தலைமை வகித்தார்கள். திருவாளர்
கள் ச. சச்சிதானந்தம் பிள்ளை, பி. ஏ., எல். டி., ஆலாலசுந்
தரஞ் செட்டியார், எம். ஏ., சைவப் பிரசங்காமிர்தம்
பூ. சமரபுரி முதலியார், திருமதி ஆர். இராஜரத்தினம்
அம்மையார் எம்.ஏ., எல்.டி. ஆகியோர் இப் பெருமக்களைக்
குறித்துப் பேசினார்கள்.

திரு வே. தியாகராய முதலியார் அவர்கள் நன்றிகூறக்
கூட்டம் முடிவுற்றது.

## புதுக்கோட்டை வாரவழிபாட்டுக் கழகம்

இதன் இரண்டாவது ஆண்டுவிழா 27–9–53, ஞாயி
றன்று, சுப்பராமையர் கலாசாலையில். மதுரை - திருஞான
சம்பந்த சுவாமிகள் மடாலயத் துணைத்தலைவர் ஸ்ரீலஸ்ரீ
சோமசுந்தர தேசிக பரமசாரிய சுவாமிகள் தலைமையில்
வெகு சிறப்பாக நடைபெற்றது. அடியார் பெருமையைப்
பற்றி, திரு. பாலகவி–வை. இராமநாதன் செட்டியாரவர்
களும், சமயவாழ்வு என்பது பற்றித் திரு. வீர. சிவசுப்பிர
மணியம் அவர்களும் விரிவுரையாற்றினர். அதுகாலை அச்
சிட்டு வழங்கப்பட்ட ஆண்டறிக்கையில் வாரவழிபாட்டு
நடைமுறை, கூட்டத்தின் சிறப்பியல்புகள், கழகம் இனிச்
செய்ய விரும்புந் தொண்டு என்னும் விஷயங்களும்,
19–9–52 முதல் 13–9–53 வரை 52–வாரங்களில் ஸ்ரீ ராம
லிங்கசுவாமிகள் மடத்தில் வாரவழிபாட்டினங்கமாக
நிகழ்ந்துவந்த சொற்பொழிவுகளின் தலைப்புக்களையும்,
சொற்பொழிவாளர்களின் பெயர்களையும் காட்டும் அநுபந்
தம் ஒன்றும் காண்கின்றன. இக் கழகத்தின் தலைவர் திரு.
வி. கே. இராஜகோபால ஐயரவர்கள், பி. ஏ., எல். டி.
அமைச்சர்கள் திரு. ஆர். சீனிவாசசுவாமி அவர்களும்,
திருமதி — பிருந்தாதேவியவர்களுமாவர். செயற்குழுவினர்
வேறு அறுவர் உள்ளனர்.

## அனுதாபக் கூட்டம்

29–1153 மாலை விருதுநகர் ஆஸ்திக சங்கங்களின் ஐக்கியக் கூட்டம், சமரஸ சன்மார்க்க சங்கத் தலைவர் உயர் திரு. அ. ச. கு. சங்கரலிங்க நாடார் அவர்களின் தலைமையில் நடந்தது. தமிழ்ப் பெரியார்கள் திரு. வி. க., பண்டித மணி கதிரேசன் செட்டியார், திரு. ந. சிவகுருநாத பிள்ளை இவர்கள் மறைந்தது குறித்துச் சமரச சன்மார்க்க சங்கச் செயலாளர் திரு. கு. ரெங்கசாமி பிள்ளை, சைவசித்தாந்தக் கழகச் செயலாளர் ஆசிரியர் ப. பொன்னம்பலம், தெய்வ நெறிக் கழகச் செயலாளர் திரு. என். எம். மல்லையா, திருப்புகழ் அருணகிரிநாதர் சபை திரு. சின்னச்சாமிக் கவிராயர், திருவள்ளுவர் கழகம் திரு.வித்வான். கு. செல்லையா, ஸ்ரீ அறுபத்துமூன்று நாயன்மார்கள் திருமடாலயத்துத் திருமதி. பொ. த. சிவகாமி அம்மாள், கைவல்யமாதர் சங்கத்துத் திருமதி வித்வான் - மீனம்மாள், ஜோதி பெண்கள் பக்திக் கழகத்துச் செயலாளர் ஔவை தங்கம்மாள், காரைக்காலம்மையார் சங்கத்துத் திருமதி. ச. ஞானம், திரு. வித்வான் சுந்தரேசன், திரு. வித்வான் ராஜகோபாலன் முதலியவர்கள் இறந்த புலவர்களின் பெருமைகளையும் வரலாறுகளையும் அவர்கள் ஆற்றிய சிறந்த பணிகளையும் பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

மறைந்த பெரியார்கள் மூவர்களுக்கும் அனுதாபத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு அன்னார் குடும்பங்களுக்கும் அனுப்புவதென்று தீர்மானிக்கப்பட்டது. இரண்டு நிமிஷம் மௌனமாக நின்று காலஞ்சென்ற பெரியார்களுக்கு மரியாதை செலுத்தப்பட்டது.

திரு. வி. க. மணிமண்டபத்திற்கு விருதை சார்பாகப் பண உதவி அனுப்பவேண்டுமென ஆசிரியர் ப. பொன்னம்பலம் வேண்டியதற்கிணங்க, எல்லாச் சங்கங்களும் பண வசூல் செய்து, திரு. அ. ச. கு. சங்கரலிங்க நாடார் மூலம் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளைக்கு அனுப்புவதென்று தீர்மானிக்கப்பட்டது.

ஆசிரியர் - ப. பொ[illegible]லம் நன்[illegible] கூட்டம் இனிது முடிந்தது.

# சமாஜ வெளியீடுகள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| பெரியபுராணம்—அகராதியுடன் ... | 3 | 0 |
| சுந்தரர் தேவாரம்—குறிப்புரையுடன் ... | 1 | 0 |
| திருப்போரூர்ச் சந்நிதிமுறை ... | 0 | 12 |
| திருவாசகம்-திருச்சதகம் (பண்டிதமணி மு. கதிரேசஞ் செட்டியார் பேருரை) ரூ. 8. அங்கத்தினருக்கு | 7 | 0 |
| சித்தாந்த அஷ்டகம் (உரையுடன்) [சிவப்பிரகாசம் (பிற்பகுதி), திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது,] உண்மைநெறி விளக்கம், சங்கற்பநிராகரணம் துகளறுபோதம் (மூலம்) ... | 0 | 8 |
| சிவஞானபோதம் தமிழ் முதல் நூலே—மொழி பெயர்ப்பல்ல. ... | 0 | 2 |
| சிவஸ்தல யாத்திரை மஞ்சரி ... | 0 | 4 |

தபாற்கூலியுள்பட முன்பணம் அனுப்புக. நூல்கள் வி. பி.-யில் அனுப்பப்படமாட்டா.

## குறைந்த விலைக்கு விற்பனை

அடியிற் குறித்த ஆண்டுகளின் 'சித்தாந்த' மலர் (12 இதழ்கள்) ஒன்று ஒரு ரூபா வீதமும், முழு மலரல்லாத தனி இதழ் ஓர் அணா வீதமும் விற்கப்படும். வேண்டியவர் தபாற் செலவுடன் முன்பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

[மலர் 4 (1931), 14 (1941), 15 (1942), 24 (1951)].

Printed at the Sadhu Press, 15, Ganapathi Mudali Street, Royapettah by D. Mangayarkarasi and V. K. Punithavathi. Edited by C. M. Ramachandran Chettiar, B.A., B.L., and Published by S. Satchidanandam Pillai, B.A., L.T., for the Saiva Siddhanta Maha Samajam, 192, Lloyd Road, Royapettah, Madras-14.

## அனுதாபக் கூட்டம்

29–1153 மாலை விருதுநகர் ஆஸ்தீக சங்கங்களின் ஐக்கியக் கூட்டம், சமரஸ சன்மார்க்க சங்கத் தலைவர் உயர் திரு. அ. ச. கு. சங்கரலிங்க நாடார் அவர்களின் தலைமையில் நடந்தது. தமிழ்ப் பெரியார்கள் திரு. வி. க., பண்டித மணி கதிரேசன் செட்டியார், திரு. ந. சிவகுருநாத பிள்ளை இவர்கள் மறைந்தது குறித்துச் சமரச சன்மார்க்க சங்கச் செயலாளர் திரு. கு. ரெங்கசாமி பிள்ளை, சைவசித்தாந்தக் கழகச் செயலாளர் ஆசிரியர் ப. பொன்னம்பலம், தெய்வ நெறிக் கழகச் செயலாளர் திரு. என். எம். மல்லையா, திருப்புகழ் அருணகிரிநாதர் சபை திரு. சின்னச்சாமிக் கவிராயர், திருவள்ளுவர் கழகம் திரு.வித்வான். கு. செல்லையா, ஸ்ரீ அறுபத்துமூன்று நாயன்மார்கள் திருமடாலயத்துத் திருமதி. பொ. த. சிவகாமி அம்மாள், கைவல்யமாதர் சங்கத்துத் திருமதி வித்வான் - மீனம்மாள், ஜோதி பெண்கள் பக்திக் கழகத்துச் செயலாளர் ஔவை தங்கம்மாள், காரைக்காலம்மையார் சங்கத்துத் திருமதி. ச. ஞானம், திரு. வித்வான் சுந்தரேசன், திரு. வித்வான் ராஜகோபாலன் முதலியவர்கள் இறந்த புலவர்களின் பெருமைகளையும் வரலாறுகளையும் அவர்கள் ஆற்றிய சிறந்த பணிகளையும் பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

மறைந்த பெரியார்கள் மூவர்களுக்கும் அனுதாபத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு அன்னார் குடும்பங்களுக்கும் அனுப்புவதென்று தீர்மானிக்கப்பட்டது. இரண்டு நிமிஷம் மௌனமாக நின்று காலஞ்சென்ற பெரியார்களுக்கு மரியாதை செலுத்தப்பட்டது.

திரு. வி. க. மணிமண்டபத்திற்கு விருதை சார்பாகப் பண உதவி அனுப்பவேண்டுமென ஆசிரியர் ப. பொன்னம்பலம் வேண்டியதற்கிணங்க, எல்லாச் சங்கங்களும் பண வசூல் செய்து, திரு. அ. ச. கு. சங்கரலிங்க நாடார் மூலம் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளைக்கு அனுப்புவதென்று தீர்மானிக்கப்பட்டது.

ஆசிரியர் - ப. பொன்னம்பலம் நன்றி கூற கூட்டம் இனிது முடிந்தது.